**தலைப்பு 117 – நெடுஞ்சாலைகள் அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நெடுஞ்சாலைகள் அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, 2021 திசெம்பர் 31 அம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய நிதிச் செயலாற்றல் கூற்று 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நெடுஞ்சாலைகள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 ஜுன் 15 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஜுலை 18 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நெடுஞ்சாலைகள் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன்

அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக் கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றது.

(ஆ) முன்னய ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக செய்யப்பட்ட பரிந்துரைகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2017 ஜூன் 28 ஆம் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம், நெடுஞ்சாலைகள் அமைச்சின் அபிவிருத்தி உட்கட்டமைப்பு வசதி விடைய இல.2506 இன் கீழாக ஏற்பட்ட மூலதனசெலவுகள் மீளாய்வாண்டின் போது சொத்துக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | தேசிய பாதீட்டு திணைக்களம் மற்றும் பொது கணக்குகள் திணைக்களம் என்பனவற்றுடனான கலந்துரையாடலின் பின்னர் கிடைக்கப்பெற்ற அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்பட மேலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. | மூலதனசெலவுகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் சொத்துக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும். |

## 2. நிதி விமர்சனம்

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் 13 செலவு விடயங்களிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 16,564.17 மில்லியன் மொத்த தேறிய ஏற்பாட்டு தொகை எவ்வித தொகைகளும் பயன்படுத்தப்படாமல் சேகரிக்கப்பட்டிருந்தது. | 13 செலவு விடையங்களிற்காக ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய ஏற்பாட்டு தொகை எவ்வித தொகைகளும் பயன்படுத்தப்படாமல் சேகரிக்கப்பட்டிருந்தது கீழ்வரும் விடையங்களின் காரணங்களினாலாகும்.<br>• எதிர்பார்த்த பிரகாரம் செலவுகளை ஏற்படுத்திக்கொள்ளாமை.<br>• அமைச்சரவை அமைச்சர்களின் தீர்மானத்தின் அடிப்படையிலான கொள்வனவுகளின் கட்டுப்பாடு.<br>• கோவிட் பரவலின் காரணத்தினால் உத்தியோகத்தர் பயிற்சியளிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் செய்யப்படாமை.<br>• பெறுகை செயன்முறையில் தாமதத்தின் காரணமாக செலவுவிடயங்களிற்கு ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளின் சேமிப்புக்கள்.<br>• புதிய செயற்திட்டத்திற்காக ஓர் வங்கிக்கணக்கினை ஆரம்பிப்பதில் தாமதத்தின் காரணமாக கொடுப்பனவுகளில் தாமதம்.<br>• எதிர்பார்த்தபடி பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படாமை.<br>• வெளிவளங்கள் திணைக்களம் கடன் உடன்படிக்கையில் கையொப்பமிட்டிராமை.<br>• போதியவு கட்டுநிதி கிடைக்கப்பெற்றிறாமை. | செலவின மதிப்பீடுகள் முறையான எதிர்வுகூறலுடன் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 25 சதவீதம் தொடக்கம் 35,000 சதவீதம் வரை என்ற வீச்சிலான மாறல் ஆரம்ப செலவின மதிப்பீடுகள் மற்றும் திருத்தப்பட்ட செலவின மதிப்பீடுகள் என்பவற்றிற்கிடையே மேம்படுத்தப்பட்டிருந்தது. | 25 சதவீதம் தொடக்கம் 35,000 சதவீதம் வரை என்ற வீச்சிலான மாறல் ஆரம்ப செலவின மதிப்பீடுகள் மற்றும் திருத்தப்பட்ட செலவின மதிப்பீடுகள் என்பவற்றிற்கிடையே | ஆண்டிற்கான செலவின மதிப்பீடுகள் அடிக்கடி மாற்றங்கள் செய்யப்படாமல் முறையான எதிர்பார்கையுடன் தயாரிக்கப்படல் வேண்டும். |

மேம்படுத்தப்பட்டிருந்தமை கீழ்வரும் காரணிகளாலாகும்:

- கோவிட் 19 பரவல் நிலை.
- சந்தை விலைகளில் அசாதாரணமான அதிகரிப்பு.
- எதிர்பாராத செலவினங்கள் எழுந்தமை.
- எதிர்பார்த்த செலவினங்கள் இடம்பெறாமை.
- வேண்டப்பட்ட ஏற்பாடுகள் போதியளவு அனுமதிக்கப்படாததால் ஏற்பாடுகள் செலவுகளை முகங்கொடுக்க போதுமானதாக காணப்படாமை.
- ஒப்பந்தங்கள் உள்நாட்டு நிதிகளில் இருந்து கொடுப்பனவிற்காக கையளிக்கப்பட்டதனால் வெளிநாட்டு நிதியளிப்பிற்கான தேவைப்பாடின்மை.
- மேந்தலைகளை ஈடுசெய்ய அனுமதிக்கப்பட்ட ஏற்பாடுகள் போதியளவின்மை.
- வேண்டப்பட்ட ஒதுக்கங்கள் கிடைக்கப்பெறாததன் காரணமாக நிர்மான வேலைகளிற்காக கொடுப்பனவு செய்ய போதியளவு ஒதுக்கமின்மை.
- ஆண்டுகாலத்தின் போது செயற்திட்ட ஆலோசனைபிரிவு உத்தியோகத்தர்களின் நியமனம் காரணமாக சம்பளங்கள் மற்றும் ஏனைய மேந்தலைகளில் அதிகரிப்பு.
- 41 குடும்பங்களை மீள்குடியமர்தல் பூர்த்திசெய்யப்படாமை காரணமாக ஒப்பந்தம் கையளிக்க இயலாமை.
- நிலுவை பட்டியல்களை செலுத்துவதற்கான பாதீட்டு ஒதுக்கீடுகளின் பற்றாக்குறை.

- 2020 ஆம் ஆண்டில் கொடுப்பனவுகள் செய்யப்பட்ட போதிலும் கணக்கிடப்படாத செலவுகளை கணக்கிட வேண்டப்பட்ட ஏற்பாடுகள் கிடைக்கப்பெறாமை.

- கொடுப்பனவிற்கான நிலுவைப்பட்டியல்களின் இருப்பனவு.
- காணி கொள்வனவு பட்டியல்களில் செலுத்தவேண்டிய தொகைகளின் அதிகரிப்பு காரணமாக மேலதிக ஏற்பாடுகள் வேண்டப்பட்டிருந்தது.
- ஐ.அ.டொலரின் பாராட்டுத்தன்மை மற்றும் புதிய நெகிழ்வுத்தன்மையான விடயங்கள் போன்றன காரணமாக செயற்திட்டத்தின் வெளிநாட்டு கூறுகளின் 100 சதவீதத்தினை எதிர்கொள்ள போதியளவு பாதீட்டு ஒதுக்கங்கள் இன்மை.
- சுற்றுச்சூழல் விளைவு மதிப்பீட்டு கற்கை, ஆரம்ப கட்ட கற்கை, நிலஅளவைகள் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு போன்றனவற்றிற்காக வேண்டப்பட்ட ஒதுக்கங்கள் கிடைக்கப்பெறாமை.
- கடன்கணக்கினை ஆரம்பிப்பதற்காக விதிக்கப்பட்ட கட்டணங்களிற்காக பாதீட்டு ஒதுக்கங்கள் வழங்கப்படாமை.
- செயற்திட்டத்தின் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட கொடுப்பனவுகளை செய்வதற்காக பாதீட்டில் ஒதுக்கங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.
- ஆரம்பிக்கப்பட்ட வேலை உருப்படிகளை பூர்த்திசெய்தல் மற்றும் அவசர வேலைகளிற்கு முன்னுரிமையளித்தல்.

(இ) மதிப்பீடுகள் செய்யப்பட்ட ரூபா 209,634.33 மில்லியன் தொகையான கூட்டுமொத்த தேறிய ஏற்பாட்டு தொகைக்கான 72 செலவின விடயங்களுடன் தொடர்புபட்ட ஓர் முறையான எதிர்வுகூறல் இல்லாமல் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பெறுபேறாக 25 சதவீதம் தொடக்கம் 99 சதவீதம் என்ற வீச்சிலான தேறிய ஒதுக்கங்கள் ஒதுக்கீடுகள் செய்யப்பட்ட செலவினங்களுடன் தொடர்புபட்டு சேமிக்கப்பட்டிருந்தது.

கீழ்வரும் விளைவுகளின் காரணமாக 25 சதவீதம் தொடக்கம் 99 சதவீதம் என்ற வீச்சிலான தேறிய ஒதுக்கங்கள் ஒதுக்கீடுகள் செய்யப்பட்ட செலவினங்களுடன் தொடர்புபட்டு சேமிக்கப்பட்டிருந்தது.

- எதிர்பார்த்தபடி செலவுகள்

செலவின மதிப்பீடுகள் முறையான எதிர்பார்கைகளுடன் தயாரிக்கப்படல் வேண்டும்.

99 சதவீதம் என்ற வீச்சிலான ரூபா 122,762.98 தொகையான கூட்டுமொத்த தேறிய ஏற்பாட்டு தொகை சேமிக்கப்பட்டிருந்தது.

ஏற்படாமை.

- கொள்வனவுகளின் கட்டுப்பாடு.
- வேண்டப்பட்டதற்கு மேலதிகமாக ஒதுக்கங்கள் வழங்கப்பட்டிருந்தமை.
- கோவிட் 19 பரவல் நிலை மற்றும் பாதகமான காலநிலை.
- திட்டமிட்டபடி வரிப்பொறுப்பு ஏற்படாமை.
- காணி இழப்பீட்டிற்காக மதிப்பீட்டு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தொகை மதிப்பிடப்பட்ட தொகையை விட குறைவாக காணப்பட்டதனால் ஒதுக்கங்கள் முழுமையாக பயன்படுத்தப்படாமை.
- இடைக்கால கொடுப்பனவு பட்டியல்கள் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அவர்கள் வெளிவளங்கள் திணைக்களத்தின் மீளப்பெறல் அறிக்கையில் உள்ளடக்காததனால் அவர்கள் கணக்கிட்டிருக்கவில்லை.
- எதிர்பார்க்கப்பட்ட பட்டியல்கள் கிடைக்கப்பெறாமை மற்றும் போதியளவு கட்டு நிதிகள் கிடைக்கப்பெறாமை.
- ஓர் ஒப்பந்ததாரரின் மந்தகதியான செயலாற்றல் காரணமாக ஒப்பந்தங்களை கைவிட்டு புதிய ஒப்பந்தங்களை கையளிக்க தீர்மமானிக்கப்பட்டது.
- திட்டமிட்ட படி ஆலோசனை கொடுப்பனவு செய்யப்படாமை.
- சொத்து முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதில் தாமதம்.
- பெறுகை செயன்முறையில் தாமதங்கள் ஏற்பட்டமை.
- நிலுவை பட்டியல்களிற்கான பற்றாக்குறையான கட்டுநிதிகள்.

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ரூபா 117.2 மில்லியன் தொகையான ஒதுக்கங்கள் செலவினவிடைய இல.117-2-4-54-2506 இற்கான துணை மதிப்பீடுகளினூடாக பெறப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 97.20 மில்லியன் தொகையான 83 சதவீதம் செலவுகள் செய்யப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் சுற்றுச்சூழல் கற்கை அறிக்கையினை தயாரிக்க பேராதனை பல்கலைக்கழகத்துடன் ஓர் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்ததுடன் உரிய வெளிக்கள பரிசோதனை நடவடிக்கைககள் கோவிட் பரவல் நிலமைகள் காரணமாக முறையாக செய்யமுடியாமல் இருந்தது. மேலும் கால்வாய் செயற்திட்டத்துடன் தொடர்புபட்ட செயற்திட்ட முகாமைத்துவ பிரிவை நிறுவுவதற்கு தேவையான உத்தியோகத்தர்களிற்காக அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை மேலும் இதனால் திட்டமிட்ட நிர்வாக செலவுகளை செய்வது சாத்திமில்லை. அதன்படி ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தது. | பாதீட்டு மதிப்பீடுகள் சரியாக அடையாளப்படுத்தப்பட்ட செலவின தேவைப்பாடுகளிற்காக மாத்திரம் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (உ) | 8 செலவின விடயங்களுடன் தொடர்புபட்ட நிதிஒழுங்குவிதி 66/69 இன் பிரகாரம் வகைமாற்றங்களின் கீழ் பெறப்பட்ட ரூபா 2,138.26 மில்லியன் தொகையான மேலதிக ஒதுக்கங்களில், ஒதுக்கீடுகளின் 100 சதவீதம் அச் செலவினவிடயங்களிற்குள் செலவுகள் செய்யப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. மேலும் 8 செலவின விடயங்களுடன் தொடர்புபட்ட மாற்றல்களின் கீழாக பெறப்பட்ட ரூபா 5,948 மில்லியன் மொத்த தொகையான மேலதிக ஒதுக்கீடுகளில் கூட்டுமொத்தம் ரூபா 4,197.48 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் அதன் பெறுபேறாக 50 சதவீதம் தொடக்கம் 96 சதவீதம் வரையான ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தன. | 8 செலவின விடயங்களுடன் தொடர்புபட்ட நிதிஒழுங்குவிதி 66/69 இன் பிரகாரம் வகைமாற்றங்களின் கீழ் பெறப்பட்ட மேலதிக ஒதுக்கங்களில், ஒதுக்கீடுகளின் 100 சதவீதம் அச்செலவினவிடயங்களிற்குள் செலவுகள் செய்யப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தமை கீழ்வரும் விடயங்களின் காரணத்தினாலாகும்.<br>• கோவிட் 19 நிலமை காரணமாக எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றலை அடையமுடியாமலிருந்தது.<br>• இடைக்கால கொடுப்பனவு பட்டியல்கள் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அவர்கள் வெளிவளங்கள் திணைக்களத்தின் மீளப்பெறல் அறிக்கையில் உள்ளடக்காததனால் அவர்கள் கணக்கிட்டிருக்கவில்லை.<br>• போதியளவு கட்டு நிதிகள் கிடைக்கப்பெறாமை. | மேற்கூறியபடி. |
| (ஊ) | அமைச்சினால் பாதீட்டு ஒதுக்கங்கள் செய்யப்பட்டு 5 செலவின விடயங்களிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 51.38 மில்லியன் தொகையான ஒதுக்கங்களில் 100 சதவீதமான ஒதுக்கங்கள் உரிய செலவின விடயங்களிற்காக செலவு | அது ஏனைய செலவு விடயங்களிற்கு வகைமாற்றப்பட்டமை கீழ்வரும் விடயங்களின் காரணத்தினாலாகும்.<br>• கோவிட் 19 பரவல் காரணத்தினால் வெளிநாட்டு போக்குவரத்தின் வரவின்மை. | மேற்கூறியபடி. |

| | |
|---|---|
| செய்யப்படாமல் நிதிஒழுங்கு விதி 66/69 இனூடாக ஏனைய செலவு விடயங்களிற்கு வகைமாற்றம் செய்யப்பட்டிருந்தது. | • எதிர்பார்க்கப்பட்ட செலவினங்கள் ஏற்பட்டிருக்கவில்லை.<br>• வெளிநாட்டு நிதிகள் ஒப்பந்தங்கள் உள்நாட்டு நிதிகளால் செலுத்தப்பட்டு கையளிக்கப்பட்டதனால் வேண்டப்பட்டிருக்கவில்லை. |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடைமைகளிற்குள் உள்ளாகுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| தொடர்ச்சியாக பொறுப்பு பதிவேட்டை சரிபார்த்து நி.ஒ.214 இன் பிரகாரம் கொடுத்து தீர்க்க நடவடிக்கை எடுத்திராததால், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரான தீர்க்கப்படாத ஒப்படைப்புக்கள் மற்றும் பொறுப்புக்களின் மொத்தப் பெறுமதி ரூபா 41,871.23 மில்லியனாக இருந்தது. | பொறுப்பு பதிவேடுகள் முறையாக சரிபார்க்கப்பட்டு ஒவ்வொருமாத முடிவிலும் நிலுவைப்பட்டியல்கள் மீதான ஓர் அறிக்கை மற்றும் கட்டுநிதி வேண்டுகோள் கடிதங்கள் என்பன திறைசேறி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தும் போதியளவு கட்டுநிதிகள் கிடைக்கப்பெறாததன் காரணமாக கொடுப்பனவிற்காக வெளிவளங்கள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட வெளிநாட்டு இடைக்கால கொடுப்பனவு பத்திரங்கள் செலுத்தப்பட்டு கணக்கிடப்படவில்லை, நிலுவைப்பட்டியல்கள் செலுத்தவேண்டியிருந்ததுடன் 2021.12.31 இலுள்ளவாறு கணக்கிடப்பட்டிருந்தது. | நிதிப்பிரமானம் 214 உடன் இணங்க வேண்டும். |

### 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள் பின்வருமாறு பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் - 104(4) | வாகன விபத்துக்கள் மீதான ஓர் முழு அறிக்கை விபத்துக்கள் ஏற்பட்டதன் பின்னர் 03 மாதங்களிற்குள் சமர்ப்பிக்கப்படவேண்டியிருந்தும் ஆண்டுகாலத்தின் போது அமைச்சில் ஏற்பட்ட 5 விபத்துக்கள் தொடர்பான உரிய முழு அறிக்கைகள் 2021 திசெம்பர் 31 இல் கூட கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் உடன்பட்டனர். | நிதிப்பிரமாணங்களுக்கமைய செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2017 திசெம்பர் 21ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 02(ii) பந்தி. | வாகனங்கள் பதிவு செய்யப்பட்ட அமைச்சு கலைக்கப்பட்டதன் பின்னர் பணிகள் மற்றும் கடமைகள் ஒதுக்கப்பட்டுள்ள அமைச்சின் பேரில் வாகனங்களை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவேண்டியிருந்தும் அமைச்சிற்கு மாற்றம் செய்யப்பட்டிராத 25 வாகனங்கள் தொடர்பாக சுற்றறிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடந்த காலப்பகுதியின் போது ஒவ்வொரு தடவையும் அமைச்சின் பெயர் மாற்றப்பட்டதனால் வாகனங்களின் பதிவு செய்யப்பட்ட பெயரினை மாற்றுவது சாத்தியமற்றதாகும். அமைச்சிற்கு உரிமையான இரண்டு வாகனங்கள் தவிர்ந்த வாகனங்களின் பதிவுசெய்யப்பட்ட பெயர் பிரதானமாக நெடுஞ்சாலையின் பெயரை உள்ளடக்குகின்றது. மிகுதி இரண்டு வாகனங்களும் இவ் அமைச்சின் பெயரின் கீழ் கையேற்பிற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த வெளியீடுகளை அடைந்திராமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கூட்டு மொத்தம் ரூபா 117.2 மில்லியன் கண்டி சுரங்கப்பாதை | செயற்திட்டத்தின் சுற்றுச்சூழல் கற்கை அறிக்கையினை | எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றலை அடைவதற்கு தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மான செயற்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டில் மதிப்பீடுகளின் பிரகாரம் ஒதுக்கப்பட்டிருந்தும் மீள்திருத்தப்பட்ட செயன்முறைத்திட்டத்தின் பிரகாரம் சுற்றுச்சூழல் விளைவு மதிப்பீட்டு அறிக்கையினை தயாரித்து பூர்த்திசெய்ய திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும் வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 82 சதவீதமான வேலைகள் மாத்திரமே மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுமொத்தம் ரூபா 17.99 மில்லியன் ஏற்பட்டு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. | தயாரிக்க பேராதனை பல்கலைக்கழகத்துடன் ஓர் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்ததுடன் உரிய வெளிக்கள பரிசோதனை நடவடிக்கைகள் கோவிட் பரவல் நிலமைகள் காரணமாக முறையாக செய்ய முடியாமல் இருந்தது. மேலும் கால்வாய் செயற்திட்டத்துடன் தொடர்புபட்ட செயற்திட்ட முகாமைத்துவ பிரிவை நிறுவுவதற்கு தேவையான உத்தியோகத்தர்களிற்காக அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை மேலும் இதனால் திட்டமிட்ட நிர்வாக செலவுகளை செய்வது சாத்திமில்லை. | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கூட்டுமொத்தம் ரூபா 75 மில்லியன் தெனியாய தொடக்கம் ரக்வான வரையான வீதி நடைபாதை புனரமைப்பின் கீழாக 18 கி.மீகளை புனரமைப்பதற்கான மதிப்பீடுகளினூடாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் திருத்தப்பட்ட செயன்முறைதிட்டத்தின் பிரகாரம் அதில் 1 சதவீதம் மீளாய்வாண்டின் போது நிர்மானிக்க திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும் நிர்மானத்தில் 0.03 சதவீதம் மாத்திரமே ரூபா 5.9 மில்லியன் கிரயத்தில் பூர்த்தி செய்யப்பட்டடிருந்தது. | 2022 ஆம் ஆண்டிற்கான முதலாவது காலாண்டில் ஆரம்பிப்பதற்கு செயற்திட்டத்திற்கான ஏலம் கடந்தவருடம் (2021) செய்யப்பட்டிருந்தது. அதன்படி உரிய பெறுகை செயன்முறைக்கான நிதி ஏலங்களினை திறப்பதற்கான நிதியியல் கடன்வழங்கும் முகவர்களின் அனுமதி 2021 திசெம்பர் 16 இல் வேண்டப்பட்டிருந்தது. ஆனால் உரிய அனுமதி 2022 பெப்ரவரி 24 இல் எங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன்படி ஒப்பந்தகையளிப்பு தாமதமடைந்திருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றலை அடைவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2021 ஆம்ஆண்டிற்கான திருத்தப்பட்ட செயன்முறைத்திட்டத்தின் பிரகாரம், வீதி பராமரிப்பு நம்பிக்கை நிதியம் தேசிய நெடுஞ்சாலைகளின் 12,224 கி.மீகள், அண்ணளவாக 4,254 பாலங்கள் மற்றும் 12 மேம்பாலங்கள் என்பனவற்றின் பராமரிப்புடன் தொடர்புபட்ட பௌதீக இலக்குகளை 100 சதவீதம் அடைய திட்டமிட்டிருந்தது. ஆனால் மீளாய்வாண்டின் போது 7 மாகாணங்களை உள்ளடக்கும் 61.68 கி.மீகளின் மணல் சீலிங் மற்றும் மேல்மாகாணத்திலுள்ள 15.85 | 12,225 கி.மீகளுடனான வீதி முறைமை பல்வேறு செயற்திட்டங்களிற்கு கையளிக்கப்பட்ட மற்றும் கையளிக்கப்பட எதிர்பார்க்கப்பட்ட வீதிகள் தவிர்ந்த மேற்பரப்பு நல்ல நிலையிலுள்ள, மணல்சீலிங், சாலை வீதியிலுள்ள பள்ளங்களை மூடுதல் மற்றும் மேற்பரப்பு பூச்சு என்பன காலபராமரிப்பின் கீழான மிகுதி வீதிகளின் தெரிவுசெய்யப்பட்ட | ஆண்டின் போது பராமரிக்க எதிர்பார்க்கப்பட்ட வீதிகள் வகைப்படுத்தப்பட்டு சரியாக அடையாளப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கி.மீகளின் உரிசீலிங் என்பன மாத்திரமே செய்யப்பட்டிருந்தது. | பகுதிகளிற்காக செய்யப்பட்டிருந்தது. மேலும் 2021 ஆம் ஆண்டில் அத்தொகை 93.38 கி.மீ ஆகவிருந்தது. | |
| (ஈ) | 2021 ஆம் ஆண்டிற்கான செயன்முறை திட்டம் மீளாய்வாண்டின் போது பல்வெறு தடவைகள் மாற்றியமைக்கப்பட்டிருந்ததுடன் இறுதியாக 2022 மார்ச் 04 இல் மாற்றியமைக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி இலக்குகள் செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட செயலாற்றலின் பிரகாரம் மீளநிறுவப்பட்டிருந்தது. அதன்படி வருடாந்த மதிப்பீட்டினூடாக ஒதுக்கப்பட்ட பணத்தில் பாரிய சதவீதம் உரிய நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | கோவிட் 19 பரவல் நிலமை, பொருளாதார பின்னடைவு போன்றன காரணமாக ஒவ்வொரு செயற்திட்டத்திற்காகவும் ஒதுக்கப்பட்ட ஒட்டுமொத்த பாதீட்டு ஏற்பாட்டு தொகை பயன்படுத்தப்பட்டிராததுடன் அடையப்பட்ட செயலாற்றலில் தங்கியிருந்தது. பயன்படுத்தப்படாத பாதீட்டு ஏற்பாட்டு தொகை செயலாற்றல் உயர்நிலையில் உள்ள செயற்திட்டங்களிற்கு மாற்றப்பட்டிருந்தது. மேலும் வெளிநாட்டுநிதியளிப்பு செயற்திட்டங்களில் உயர்பௌதீக செயலாற்றல் இருந்த போதிலும் நிதிச்செயலாற்றல் திறைசேரிக்கு அச் செயற்திட்டங்களுடன் தொடர்புபட்ட இடைக்கால கடன் கொடுப்பனவுகளின் அறிக்கையிடல் மற்றும் கணக்கிடலில் தாமதத்தின் காரணமாக குறைந்த பெறுமதியை காட்டியது. இந்நிலமைகளின் அடிப்படையில் செயற்திட்டங்களிற்கு ஒதுக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீடுகள் மாற்றியமைக்கப்பட்டிருந்தது எனவே மாற்றியமைக்கப்பட்ட செயன்முறைத்திட்டம் ஆண்டின்இறுதியில் அதற்கேற்ப தயாரிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த செயன்முறைத்திட்டம் அடையப்பட்ட இலக்குகளிற்கு ஏற்ப நேரத்திற்கு நேரம் மாற்றியமைக்கக்கூடாது. |

## 3.2 வெளிநாட்டு நிதியளிப்பு செயற்திட்டங்கள்

### 3.2.1 ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 16 ஆம் திகதிய புதுப்பிக்கப்பட்ட வசதி நிர்வாக கையேட்டின் பிரகாரம், தென், மத்திய, சப்பிரகமுவ, வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்கள் மற்றும் மேல் மாகாணத்திலுள்ள களுத்துறை மாவட்டம் என்பனவற்றிலுள்ள தேசிய வீதிகளின் 248 கி.மீ கள் மற்றும் கிராமிய வீதிகளிலுள்ள 3,108 கி.மீகள் என்பனவற்றின் வீதி புனரமைப்பு வேலைகள் நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதியின் போது புனரமைக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இருப்பினும், 4 தேசிய வீதிகளின் 27.43 கி.மீ நீளம் மற்றும் 537 கிராமிய வீதிகளின் 2,062.96 கி.மீ நீளம் என்பனவற்றின் புனரமைப்பு என்பன மாத்திரமே நிகழ்ச்சித்திட்ட ஆரம்பிப்பு திகதியிலிருந்து 06 வருடங்கள் கடந்த பின்னர் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டு உரிய முகவர்களிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. | திட்டமிட்ட நீளத்தினை பூர்த்திசெய்வதில் குறைபாடு ஏற்பட்டமைக்கான காரணங்களாவன,<br>• 2015, 2018, 2019 மற்றும் 2020 இல் அரசாங்க மாற்றங்கள் மற்றும் அமைச்சரவை மறுசீரமைப்பு என்பன காரணமாக பெறுகை குழுக்களின் மீளநியமிப்பு போன்ற பீஎம்யூ வின் கட்டுப்பாட்டிற்கு பின்னாலான காரணங்கள் காரணமாக பெறுகை நடவடிக்கையில் தாமதங்கள்.<br>• குறைந்தளவான செயலாற்றல் காரனமாக அமுல்படுத்தலில் ஒப்பந்தகைவிடல்.<br>• நீதிமன்ற கட்டளை உத்தரவுகள்.<br>• அரசாங்கத்தின் அபிவிருத்தி கொள்கையின் முன்னுரிமையில் மாற்றத்தின் பெறுபேறாலான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழாக ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்ட வீதிகளின் மாற்றம்.<br>• கேவிட் 19 காரணமாக ஒப்பந்ததாரர்களின் செயலாற்றல் பாரியளவு பாதிப்படைந்திருந்தமை. | நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்பகட்ட திட்டத்தின் பிரகாரம் வேலை செய்யவும் நேர வரையறையுடன் இலக்குகளை பூர்த்தி செய்யவும் தேவையன நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 09 ஒப்பந்த பொதிகளின் கீழான தேசிய வீதிகளின் 423.11 கி.மீ களை புனரமைக்க திட்டமிட்டிருந்தும், 278.11 கி.மீ நீளங்களை உள்ளடக்கும் 06 ஒப்பந்த பொதிகள் மாத்திரமே 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கையளிக்கப்ப்டிருந்ததுடன் பெறுகை செயன்முறைகூட ஏனைய 03 ஒப்பந்தபொதிகளிற்கு பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | பதீல் விளக்கமாக இல்லை. | நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்பார்த்த இலக்குகளை அடைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | அண்மையில் கையளிக்கப்பட்ட ஆர்எம்சீ 06 மற்றும் ஆர்எம்சீ 07 ஒப்பந்தபொதிகளை தவிர்த்து கையளிக்கப்பட்ட வீதி முகாமைத்துவ ஒப்பந்தங்களில் (ஆர்எம்சீ), ஆர்எம்சீ 01 ஒப்பந்தப்பொதியின் கீழான அனைத்து நான்கு ஒப்பந்தங்களும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 50 சதவீதம் என்ற குறைந்த செயலாற்றலை அறிக்கையிட்டுள்ளது. | கோவிட் 19 பரவல் நிலை, சீமந்துக்களின் பற்றாக்குறை, உடைந்த முலப்பொருட்கள் மற்றும் அனைத்து நிர்மான முலப்பொருட்களும் நாடுபூராகவும் இன்மை, பாதகமான காலநிலை தாக்கம் மற்றும் வீதி பிரிவில் பல்வேறு மண்சரிவுகள் ஏற்பட்டதன் காரணமாக வீதி பயன்பாட்டாளர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி புனர் நிர்மான வேலைகளை செய்ய சில வாரங்கள் வீதி முழுமையாக முட வேண்டியிருந்தமை. இக்காரணங்கள் காரணமாக மந்தகதியான செயலாற்றல் அறிக்கையிடப்பட்டிருந்தது. | நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்பார்த்த இலக்குகளை அடைய தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | கைவிடப்பட்ட 12 ஒப்பந்த பொதிகளில், 6 ஒப்பந்த பொதிகளின் மிகுதி வேலைகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இச் செயற்திட்டத்தினூடாக செய்து முடிக்க மீள கையளிக்கப்பட்டிருந்ததுடன் மீள்கையளிக்கப்பட்ட ஒப்பந்தங்களின் பெறுமதி உண்மையான ஒப்பந்த விலையுடன் ஒப்பிடும் போது ரூபா 4,808.8 மில்லியனால் அதிகரித்து காணப்பட்டது. எனவே மந்தகதியன செயற்திட்ட முகாமைத்துவம் காரணமாக அரசாங்கம் மேலதிக கிரயங்களை எதிர் கொள்ள வேண்டும். | ஒப்பந்ததாரர்கள் இடைநிறுத்தப்பட்ட வேலைகளை ஆரம்பித்து ஏற்றுக்கொள்ளத்தக்க செயலாற்றலை அடைய முடியாமலிருந்ததனால், ஒப்பந்தங்கள் கைவிடப்படல் வேண்டும். அதன்படி ஒப்பந்தங்கள் 06 ஒப்பந்தங்களின் மிகுதி வேலைகளை பூர்த்திசெய்ய கையளிக்கப்பட்டிருந்தது. இப்புதிய ஒப்பந்தங்களின் ஏல விலைகள் அந்நேரத்தில் மூலப்பொருட்களின் விலைகள் உயர்வாக போனதால் உண்மையான ஒப்பந்தங்களை விட அதிகமாக உள்ளது. இருப்பினும் ஏல விலைகளிற்கிடையேயான வித்தியாசம் வேலை வழங்குனர்களின் | நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்பார்த்த இலக்குகளை அடைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டியதுடன் மந்தகரமான ஒப்பந்ததாரர்களிற்கு எதிராக முறையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கொடுப்பனவுகளினூடாக கைவிடப்பட்ட ஒப்பந்தங்களின் ஒப்பந்ததாரர்களிடமிருந்து அறவிடப்படல் வேண்டும். | |
| (உ) | 100,000 கி.மீ கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினூடான 04 கைவிடப்பட்ட ஒப்பந்தங்களின் மிகுதி வேலைகளை பூர்த்திசெய்வதற்காக கையொப்பமிட்ட தீர்ப்பனவு உடன்படிக்கையின் விதிகள் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம், மிகுதி வேலைகள் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட திகதியிலிருந்து 15 மாதங்களிற்குள் பூர்த்தியாக்க உடன்பட்டிருந்தது. 2022 ஜனவரி 31 இல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட திகதியிலிருந்து 18 மாதங்கள் கடந்திருந்தும், 11 தொடக்கம் 29 சதவீதத்திற்கிடையேயான மிகக்குறைந்த பௌதீக செயலாற்றல் இப்பொதிகளில் அறிக்கையிடப்பட்டிருந்தது. புனரமைப்பு நடவடிக்கைகளிலுள்ள மந்தகதியான செயலாற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின் கிரயத்தில் தேவையற்ற அதிகரிப்பினை ஏற்படுத்த முடியுமானதுடன் அரசாங்கத்தின் மீது ஓர் மேலதிக சுமையாக இருக்கும். | ஒப்பநத்தாரரின் நிறுவனம் அனைத்து பொதிகளின் மீதும் வேலையை ஆரம்பித்திருந்தும், நாட்டிலுள்ள கோவிட் 19 பரவல், போக்குவரத்து கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டமை, உத்தியோகத்தர்களை இடைவிட்டுவிட்டு சேவைக்கு அழைப்பு, நிர்மான மூலப்பொருட்களிற்கான அதிகரித்த கேள்வி காரணமாக மூலப்பொருடகளின் குறைபாடு, நிர்மான இயந்திரங்களிலுள்ள பழுதுகளை திருத்த சந்தையில் உதிரிப்பாகங்களின் கிடைப்பனவின்மை மற்றும் தொழிற்சாலைகளின் மூலப்பொருட்கள் வழங்கல் போன்றன காரணமாக மேற்கூறிய ஒப்பந்தபொதிகளின் செயலாற்றல் மட்டத்தினை திட்டமிட்ட படி அடையமுடியாமலிருந்தது. | மேற்கூறியபடி |
| (ஊ) | ஓர் தீர்ப்பனவு உடன்படிக்கை கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 100,000 கி.மீ ஊடாக அதே தோல்வியுற்ற ஒப்பந்ததாரருடன் 04 கைவிடப்பட்ட ஒப்பந்தங்களின் மீகுதி வேலைகளை பூர்த்திசெய்ய கையொப்பமிடப்பட்டிருந்ததுடன் அவ் ஒப்பந்தங்களின் பெறுமதி உண்மையான ஒப்பந்த பெறுமதியுடன் ஒப்பிடும் போது ரூபா 417.6 மில்லியனால் அதிகரித்து காணப்பட்டமையும் வெளிப்படுத்தப்பட்டது. அதன்படி, முறையற்ற நிதி நன்மைகள் ஏனைய செயற்திட்டமூடாக ஒப்பந்தங்களை தொடர உரிய ஒப்பந்ததாரரிற்கு வாய்ப்பினை வழங்குவதனூடாக தோல்வியுற்ற ஒப்பந்ததாரறிற்கு வழங்கப்பட்டிருந்தது. | ஒப்பந்ததாரர் நீதிமன்ற வழக்குகளை மீளப்பெற்று இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களிலிருந்து மீளப்பெறப்படாத முற்பணங்களை மீளவழங்க உடன்பட்டதனால் 100,000 கி.மீ கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொடர அதே ஒப்பந்ததாரர் அனுமதிக்கப்பட்டிருந்தார். | மேலும் தாமதமின்றியும் மேலதிக கிரயங்களின்றியும் நிர்மானத்தினை பூர்த்திசெய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டியதுடன் மந்தகரமான ஒப்பந்ததாரர்களிற்கு எதிராக முறையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | ஒப்பந்தம் கைவிடப்பட்ட திகதியிலிருந்து அண்ணளவாக 03 வருடங்கள் கடந்திருந்தும் கைவிடப்பட்ட 12 ஒப்பந்த பொதிகளில் நிகழ்ச்சித்திட்டமானது ஜீ1 மற்றும் கேஎல்02 எனப்பெயரிடப்பட்ட 02 ஒப்பந்தபொதிகளின் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | கேல்2 ஒப்பந்ததாரர் இன்றய திகதி வரை செயன்முறையிலுள்ள மீள் ஏலமிடலிற்கு எதிராக தடை உத்தரவினை பெற்றிருந்தார். ஜி1 ஒப்பந்ததாரர் கூட நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்திருந்ததுடன் உச்ச நீதிமன்றமானது தற்போதய நிலையில் பேண இருதரப்பினர்களிற்கும் கட்டளையிட்டுள்ளது. அதன்படி உச்ச நீதிமன்ற வழக்கு நடைமுறையில் இருந்ததிலிருந்து, ஜி1 பொதி கூட மீள ஏலமிட முடியாது. | மேற்கூறியபடி. |
| (ஏ) | ரூபா 45.54 மில்லியன் தொகையான வட்டி மற்றும் ஒப்படைப்பு கட்டணங்கள் மீளாய்வாண்டின் போதான வழங்கப்படாத/பயன்படுத்தப்படாத வருமானங்கள் மீது கடன்வழங்கும் முகவரிற்கு சிக்கனமற்ற முறையில் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட வட்டி மற்றும் ஒப்படைப்பு கட்டணங்கள் ரூபா 1,516.79 மில்லியனாக இருந்தது. | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் கடன்தாரர் ஆண்டிற்கு 0.15 சதவீதம் ஒப்படைப்பு கட்டணம் செலுத்த வேண்டும். இருப்பினும், செயற்திட்டத்தின் செயலாற்றல் நல்ல நிலையிலிருந்தால், ஒப்படைப்பு கட்டணத்தின் செயலாற்றல் குறைக்க முடியுமானதுடன் இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஒதுக்கப்பட்ட ஒப்படைப்பு கட்டணங்களிற்குள் பேணவும் முடியும். | செயற்திட்டத்தின் அடிப்படை திட்டத்தின் பிரகாரம், எதிர்பார்க்கப்பட்ட பணிகள் உயர்ந்த நிலையில் செய்யப்பட வேண்டியதுடன் மீளப்பெற எதிர்பார்க்கப்பட்ட அனைத்து கடன்தொகையும் பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ஐ) | ஒப்பந்தத்தின் குறித்த நிபந்தனையின் உப பிரிவு 14.6 இன் பிரகாரம் ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இடைக்கால கொடுப்பனவு பத்திரத்தின் குறைந்தபட்ச பெறுமதி ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்த பெறுமதியால் 1.5 சதவீதமாகும். இருப்பினும், மீளாய்வண்டின்போது 22 பொதிகளின் கீழாக இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களை பரிசீலனை செய்யும் போது 62 விடயங்கள் தேவையான நிபந்தனையிற்கு கீழ் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | கோவிட் 19 பரவலின் கீழான, ஊழியர்கள் வேலை செய்வதில் கட்டுப்பாடு, பாதகமான காலநிலை, மூலப்பொருட்களை பெறுகை செய்வதில் கடினம், போன்றன காரணமாக பட்டியலிடப்பட்ட செயலாற்றல் அடையப்பட்டிராததுடன் வாடிக்கையாளர் இவ் உபபிரிவிலிருந்து தளர்த்த உடன்பட்டுள்ளதுடன் ஒப்பந்ததாரரின் காசுப்பாய்ச்சலை பேனுவதற்காக இடைக்கால கொடுப்பனவு செய்யவும் உடன்பட்டிருந்தார். | கிரயம், நேரம், மற்றும் ஒப்பந்ததாரரிற்கான தேவையற்ற நன்மைகளை குறைப்பதற்கு ஒப்பந்த நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்ட விடயங்களை கடைப்பிடித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | செயலாற்றல் பாதுகாப்பு பத்திரம் ஒப்பந்ததாரர்களினால் அவர்களது சொந்த செலவில் வழங்க வேண்டியிருந்தும், வேறான ஒரு கொடுப்பனவு உருப்படி ஆரம்பகட்ட மற்றும் பொதுவான உருப்படிகளின் கீழான அளவைப்பட்டியலில் செய்யப்பட்டுள்ளமை ஒப்பந்ததாரரிற்கு மீளப்பெற முடியுமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன்படி, கூட்டு மொத்தமாக ரூபா 556.38 மில்லியன் ஒப்பந்ததாரர்களினால் பெறப்பட்ட பாதுகாப்பு பத்திரத்தின் கிரயத்தினை மீளப்பெற ஒப்பந்ததாரரிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட ஒப்பந்ததாரர்களிடமிருந்து அத்தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வடக்கு, கிழக்கு மற்றும் ஏனைய வருங்கால ஒப்பந்தங்களில் இவ் உருப்படிகள் பீஓகியுவ் விலிருந்து நீக்கப்பட்டுள்ளது. | நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஏற்பட்ட நட்டங்களை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஓ) | ஒப்பந்த விபரக்குறிப்பின் உபபிரிவு 108.4 இன் பிரகாரம் பிரதான மற்றும் கள ஆய்வுகூடங்களின் ஆய்வுகூட உபகரணம் மற்றும் தளபாடங்கள் நிகழ்ச்சித்திட்ட முடிவில் ஒப்பந்ததாரரிற்கு திருப்பி அனுப்பவேண்டியிருந்தும், ரூபா 615.22 மில்லியன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ் உருப்படிகளிற்காக ஓர் கூட்டுமொத்தமாக (Lumpsum) நிகழ்ச்சித்திட்டத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி, வழமையான ஒப்பந்த நிபந்தனைகள் தேவையற்ற நன்மைகளை பெற ஒப்பந்ததாரரிற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் ஆர்டிஏவிற்கு ஏதாவது தளபாடம் மற்றும் ஆய்வுகூட மற்றும் அளவை உபகரணங்கள் தேவைப்பட்டால், இந்நிபந்தனைகள் அவ்வாறான நிபந்தனைகளுடன் வழங்க சீரமைக்கப்படும். இருப்பினும் இவ் உருப்படிகள் 2-3 வருடங்களிற்கு மேல் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் ஒப்பந்த முடிவில் அனேகமாக பாவனையற்ற அல்லது காலம் கடந்த நிலையில் காணப்பட்டது. | பொதுவாக, சொத்துக்கள் வேலை வழங்குனரால் தக்கவைக்கப்பட்டுள்ளன. எனவே, இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான ஒப்பந்தத்தின் கிரயம் ஏனைய ஒப்பந்தங்களின் கிரயங்களுடன் ஒப்பிடும் போது குறைக்கப்படல் வேண்டும். |
| (ஔ) | வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் 100,000 கி.மீ கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தபொதிகளுடன் தொடர்புபட்ட ஒப்பந்ததாரர்களிற்கும் இடையேயான தீர்ப்பனவு உடன்படிக்கையின் பிரகாரம், இருதரப்பினர்களும் வேலை ஆரம்பிப்பு முற்பணங்களை மீளபெற உடன்பட்டிருப்பினும், அப்பொதிகளுடன் தொடர்புபட்டு 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | ஒருங்கினைக்கப்பட்ட வீதி முதலீட்டு திட்டம் மற்றும் மிகுதி வேலைக்கான தீர்ப்பனவு உடன்படிக்கை என்பவற்றுடன் தொடர்புபட்ட ஒப்பந்த உடன்படிக்கையில் கூறப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம், செலுத்தப்பட்ட முற்பணங்களை எவ்வாறு மீள அறவிடுவது என்பது தொடர்பாக, வேலை உருப்படிகளிற்காக ஒப்பந்த | பெற வேண்டிய மிகுதிகளை மீளப்பெற்றுக்கொள்ள நிகழ்ச்சித்திட்த்தினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளஅறவிடப்படாத வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் ரூபா 963.26 மில்லியனாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களினூடாக செலுத்தப்பட்ட முற்பண தொகைகளை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (க) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 மிள் கையளிக்கப்பட்ட ஒப்பந்த பொதிகளுடன் தொடர்புபட்ட மீளஅறவிடப்படாத வேலை ஆரம்பிப்பு முற்பண தொகை ரூபா 1,453.09 மில்லியன் பெறுமதியாகவிருந்தது. மேலும், 02 கைவிடப்பட்ட ஒப்பந்த பொதிகளுடன் தொடர்புபட்ட மீள அறவிடப்படாத வேலை ஆரம்பிப்பு முற்பண தொகை ரூபா 377.07 மில்லியன் நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஓர் மேலதிக கிரயமாக இருக்கக்கூடும். | ஒப்பந்ததாரர்கள் இவ் ஒப்பந்தங்களிற்கான முற்பண உறுதிப்பத்திரத்திற்கான பணமாக்கலினை தடுக்க நீதிமன்ற கட்டளை மற்றும் மேன்முறையீடு என்பனவற்றை பெற்றுள்ளனர். நீதிமன்ற வழக்குகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபை நீதிமன்ற தீர்ப்பு செயன்முறைப்படுத்தப்பட்டதன் பின்னர் மாத்திரமே முற்பண கொடுப்பனவுகளை மீள அறவிட முடியாமலிருக்கம். | மேற்கூறியபடி |
| (ச) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, 43 பிணக்குகள் பிணக்குகள் இணக்க சபையின் தீர்மானங்களிற்காக கையளிக்கப்பட்டுள்ளதுடன் அதில், அவ் பிணக்குகள் இணக்க சபையின் நிர்மானத்திற்கான பிணக்கின் மொத்த ஆரம்ப கிரய பெறுவனவு தொகை ரூபா 1,698.73 மில்லியன் ஒப்பந்ததாரரிற்கு சாதகமாகவிருந்தது. இருப்பினும், கொடுப்பனவுகள் ஜீ2 பொதிக்கான தொகை ரூபா 107.72 மில்லியன் தவிர 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இது தொடர்பில் நிகழ்ச்சித்திட்டத்தினால் செய்யப்பட்டிருக்கவில்லை. | வேலை வழங்குளரால் வழங்கப்பட்ட திருப்தியின்மை அறிவிப்பிற்கான பெறுவனவுகளிற்காக கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்ததுடன் பிடிகாசு மற்றும் ஒப்பந்ததாரரினால் வழங்கப்பட்ட திருப்தியின்மை அறிவிப்பிற்கான பெறுவனவுகள் தொடர்பானவைகள் என்பன அவர்களினால் மற்றுமொரு நடுவர் தீர்ப்பு பொறிமுறை ஊடாக தீர்க்கப்படும். | ஒப்பந்ததாரர்கள் விதிமுறை மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன் பிணக்குகளை குறைக்க வேண்டும். |

### 3.2.2 இரண்டாவது ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் மேல் மாகானங்களிலுள்ள 36 தேசிய வீதிகளின் 417.75 கி.மீ கள் மற்றும் 1349 கிராமிய வீதிகளின் 3338.87 கி.மீ களின் வீதி புனர்நிர்மான வேலைகள் 2021 ஏப்ரலில் வசதியளிப்பு நிர்வாக கையேட்டின் பிரகாரம் செயற்திட்டத்தினால் புனரமைக்க | வசதியளிப்பு நிர்வாக கையேடு கடன் உடன்படிக்கையின் ஆரம்பகட்டத்தில் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்ட திகதிகள் மதிப்பீடுகள் மாத்திரமே. ஆனால், உண்மையான வீதி புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டம் | நிகழ்ச்சித்திட்டத்தின் உரிய இலக்குகளை அடைய தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்டிருந்தது, ஆனால் 01 தேசிய வீதியின் 11.61 கி.மீகள் மற்றும் 149 கிராமிய வீதிகளின் 595.66 கி.மீகள் மாத்திரமே 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டு உரிய முகவர்களிடம் கையனிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்ட பெறுகை திட்டம் மற்றும் அனுமதிக்கப்பட்ட உண்மையான திகதி என்பவற்றின் பிரகாரமுள்ளது. | |
| (ஆ) | 03 கைவிடப்பட்ட ஒப்பந்தப்பொதிகளுடன் தொடர்புபட்ட ரூபா 690.74 மில்லியன் தொகையான செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை காசாக மாற்ற மீளாய்வாண்டின் இறுதியில் கூட நிகழ்ச்சித்திட்டத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்ற கட்டளைகள் பெறப்பட்டுள்ளதுடன் செயற்படுத்தல்கள் நடைமுறையிலுள்ளதனால் கைவிடல் பணம் மற்றும் பெறுவனவுகளின் மீளஅறவிடல் அச்சட்ட செயன்முறைகள் பூர்த்தியானதன் பின்னர் மாத்திரமே சாத்தியமானதாகவிருக்கும். | நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஏற்பட்ட நட்டத்தை மீளப்பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | கடன் வழங்கும் முகவர் வேலை ஆரம்பிப்பு முற்பணத்தினை மீளப்பெற்று கைவிடப்பட்ட ஒப்பந்தங்களுடன் தொடர்புபட்ட கடன் வழங்கும் முகவரிற்கு மீளச்செலுத்த அறிவுறுத்தப்பட்டிருந்தும் செயற்திட்டமானது ஊவா மாகாணத்திலுள்ள 03 கைவிடப்பட்ட ஒப்பந்த பொதிகளுடன் தொடர்புபட்ட ரூபா 560.14 மில்லியன் தொகையான நிலுவை வேலை ஆரம்பிப்பு முற்பணங்களை மீளப்பெற தவறியிருந்தனர். அதன் படி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீளப்பெறப்படாத மொத்த வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் ரூபா 13,922.63 மில்லியனாகும். | மேற்கூறியபடி | நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஏற்பட்ட நட்டத்தை மீளப்பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 14.9 இன் பிரகாரம் ஒப்பந்ததாரரானவர் கையேற்பு பத்திரம் வழங்கப்பட்டதன் பின்னர் 50 சதவீத பிடிகாசினை செலுத்தவேண்டியதுடன் மிகுதி 50 சதவீதம் குறைபாட்டு தீர்ப்பனவு காலப்பகுதி அல்லது உபஉத்தரவு பத்திரம் காலாவதியாவதன் பின்னர் விடுவிக்கப்பட முடியும். இருப்பினும் பொதிகளானது கையேர்பு பத்திரங்களை வழங்கியிராத போதிலும் 06 ஒப்பந்த பொதிகளுடன் தொடர்புபட்ட ரூபா 772.66 மில்லியன் தொகையான மொத்த பிடிகாசினையும் ஒப்பந்ததாரர்களிற்கு விடுவித்திருந்த நிகழ்வுகள் அவதானிக்கப்பட்டது. | அனேகமான ஒப்பந்ததாரர்கள் கோவிட் மற்றும் ஏனைய விடையங்கள் என்பன காரணமாக ஏற்பட்டிருந்த காசுப்பாய்ச்சல் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கான வங்கி உத்தரவு பத்திரங்களிற்கு ஈடாக பிடிகாசினை விடுவிக்க வேண்டியிருந்தனர். எனவே, அமைச்சரவை அமைச்சர்களின் அனுமதி பிடிகாசில் 100 சதவீத்தினை கழித்த பின்னர் வங்கி உத்தரவு பத்திரங்கள் மீதான பிடிகாசினை விடுவிப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் திறைசேரியின் ஆலோசனையுடன் | கிரயம், நேரம், மற்றும் ஒப்பந்ததாரரிற்கான தேவையற்ற நன்மைகளை குறைப்பதற்கு ஒப்பந்த நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்ட விடயங்களை கடைப்பிடித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பெறப்பட்டுள்ளது. | |
| (உ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 15.3 இன் பிரகாரம் பொறியியலாளர்கள் கைவிடல்களிற்கான அறிவிப்பு வழங்கப்பட்டதன் பின்னர் சாத்தியமான அளவு விரைவில் ஒப்பந்ததாரர்களிற்கு சொந்தமான வேலைகள், பொருட்கள் மற்றும் ஏனைய கூட்டுமொத்தங்கள் என்பனவற்றின் பெறுமதியினை தீர்மானிக்க வேண்டும். இருப்பினும் ஊவா மாகாணத்தில் கைவிடப்பட்ட 03 ஒப்பந்த பொதிகளின் கைவிடலின் போதான பெறுமதி கைவிடல் அறிவிப்பு வழங்கப்பட்ட பின்னர் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 மாதங்களிற்கு மேல் கடந்திருந்தும் கூட வேலை வழங்குனரால் கணிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தம் கைவிடப்பட்ட தருனத்தில் பூர்த்தியாக்கப்பட்ட வேலைகளின் பெறுமதியை தயாரிக்க இணைந்த அளவீடுகள் பெறப்பட வேண்டியிருந்தும் ஒப்பந்ததாரர் கூட்டு பரீட்சிப்பில் பங்குபற்றாததுடன் கைவிடல் தொடர்பான ஆவணங்களை சமர்ப்பித்திருக்கவில்லை.<br>எனவே, பொறியியலாளர் அவராகவே கைவிடலின் போதான பெறுமதியை தயாரிக்க அனைத்து அளவைகள், பொறியியல் திட்டம், மதிப்பீடுகள் என்பவற்றினை செய்ய வேண்டியிருந்தது. இருப்பினும், தற்போது, கைவிடலின் போதான பெறுமதி பொறியியலாளரினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் விபரங்கள் சமர்ப்பிக்கப்பட முடியும். | கைவிடலின் போதான பெறுமதி மீள்ஏலமிடல் செயன்முறை ஆரம்பிக்க முன்னர் பூர்த்திசெய்யப்படல் வேண்டும். |
| (ஊ) | பொறியியலாளர்கள் மதிப்பீட்டிற்கு எதிரான ஒப்பந்த தொகைகளில் தேறிய பெறுமதி அதிகரிப்பு 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏற்கனவே கையளிக்கப்பட்டிருந்த ஏழு மீள் ஏலமிடப்பட்ட ஒப்பந்த பொதிகளின் 10.33 சதவீதம் தொடக்கம் 33.21 சதவீதம் வரையான வீச்சிற்குள் இருந்தது. | பொறியியலாளர்களின் மதிப்பீடு எச்எஸ்ஆர் இனை பயன்படுத்தி தயாரிக்கப்படுவதுடன் கிராமிய வீதிகளின் கிரயத்தின் மதிப்பீட்டிற்கு பயன்படுத்துவது சாத்தியமற்றதாகும். அதற்காக தேவைப்பட்ட முறையான பொறிமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பொறியியலாளர்களின் மதிப்பீடுகள் பெறுகை வழிகாட்டியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் யதார்த்தமானதாக இருக்க வேண்டும். |
| (எ) | நிகழ்ச்சித்திட்டமானது ஒன்றுக்குமேற்பட்ட ஒப்பந்தங்களை அனுமதிப்பதனை குறைந்த நீடிப்பு பதிலளிப்பு ஏலதாரரை தவிர்க்க ஏல ஆவணங்களின் பிரிவு 03 இலுள்ள விசேட உபபிரிவு 1.6 இன் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தமை அரச பெறுகை வழிகாட்டி நியம ஏல ஆவணங்களிற்கு முரணாக இருந்தது. எனவே குறைந்த நீடிப்பு பதிலளிப்பு ஏலதாரர் ஒன்றிற்கு மேற்பட்ட ஒப்பந்த பொதியை வழங்க முடியாமலிருக்கக்கூடும். ரூபா 66.75 மில்லியனான ஓர் மேலதிக கிரயம் ஊவா மாகாணத்திலுள்ள கையளிக்கப்பட்ட ஒப்பந்த பொதிகளிலிருந்து மாத்திரம் செயற்திட்டத்தினால் செய்யப்பட்டிருந்தது. | செயற்திட்டமானது மந்தகதியான செயலாற்றல் காரணமாக இடைநடுவில் கைவிடப்பட்ட ஒப்பந்தங்களை கொண்டு பல்வேறு ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்ட பல்வேறு ஒப்பந்ததாரர் சம்பந்தமான அனுபவத்தை கொண்டுள்ளது. ஆனலும், கடுமையான பொதுமக்கள் முறைப்பாடுகள் மற்றும் அசௌகரியங்கள் என்பனவற்றை ஏற்கனவே கைவிடப்பட்ட ஒப்பந்தங்கள் காரணமாக முகம்கொடுத்திருந்தனர்.<br>எனவே, ஏலதாரரிற்கு ஓர் ஒப்பந்தத்தினை மாத்திரம் | பெறுகை வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் நிகழ்ச்சித்திட்டத்திற்கு சிக்கனமற்ற கிரயங்களை குறைக்க கண்டிப்பாக பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கையளிப்பது செயற்திட்ட தோல்வியிற்கான ஆபத்தினை குறைக்கும். | |
| (ஏ) | குறைந்த நீடிப்பு பதிலளிப்பு ஏலதாரர் ஒன்றிற்கு மேற்பட்ட ஒப்பந்த பொதியை வழங்க முடியத காரணத்தால் ஒப்பந்தங்களை கையளிக்காமல் மிகுதி இரண்டு ஒப்பந்த பொதிகளை மீள் ஏலமிட தீர்மானித்திருந்ததுடன் அப் பெறுகை நடவடிக்கைகள் 2022 மார்ச் 31 கணக்காய்வு திகதி வரை கூட செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே தேவையற்ற ஏல நிபந்தனைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் அனைத்து செயலாற்றலையும் பாதகமான முறையில் நேரடியாக பாதித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | மீள ஏலங்களை அழைப்பதற்கான படிமுறைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவின் பரிந்துரை ஏல ஆவணங்களிற்காக பெறப்பட்டுள்ளது. ஏலங்கள் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் அமைச்சு பெறுகை குழு என்பவற்றின் ஆட்சேபனை இன்றி அழைக்கப்படுகின்றது. | ஒப்பந்தங்களின் நிபந்தனைகள் நிகழ்ச்சித்திட்டத்திற்கான தேவையற்ற தாமதங்கள் மற்றும் கிரய அதிகரிப்பு என்பனவற்றை தவிர்க்க மிகஆழமாக மீளாய்வு செய்யப்படல் வேண்டும். |
| (ஐ) | வழமைக்கு மாரான ஏல நிபந்தனைகளை பயன்படுத்தலானது கைவிடப்பட்ட விதி புனரமைப்பு ஒப்பந்தங்களின் மிள ஏலமிடல் மீதான பெறுகை நடவடிக்கைகளின் மிருதுவான செயற்பாட்டினை நேரடியாக பாதித்திருந்தது. மேலும், நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான வீதி புனரமைப்பு வேலைகள் காலத்தின் போது, குறித்த நிபந்தனையின் 103.2(2) இன் கீழான அவ்வீதிகளின் வழமையான பராமரிப்பிற்கான ஓர் கொடுப்பனவு உருப்படி ஏற்கனவே உள்ளது. இதன் காரணமாக ஊவா மாகாணத்திலுள்ள 03 கைவிடப்பட்ட ஒப்பந்தபொதிகளின் மீள ஏலமிடல் மற்றும் கையளிப்பில் தாமதம் காரணமாக, நிகழ்ச்சித்திட்டத்திற்கு அவ்வீதிகளை குறைந்தபட்ச ஓட்ட நிலையில் பேண தேவையான அவசர பராமரிப்பு வேலைக்கு தேவையான ரூபா 66.26 மில்லியன் தொகையுடனான 04 மேலதிக ஒப்பந்த பொதிகளை கையளித்தல் ஓர் மேலதிக மற்றும் சிக்கனமற்ற கிரயமாக அவதானிக்கப்பட்டது. | அவ்வாறான வீதிகளின் பராமரிப்பிற்காக ஏற்பட்ட மேலதிக கிரயம் அவ்வீதிகளின் கைவிடப்பட்ட ஒப்பந்த பொதிகளிலிருந்து மீளப்பெறப்பட்டிருக்கும். | கைவிடலின் போதான பெறுமதி மீளஏலமிடல் செயன்முறையை எளிதாக்க வினைத்திறனாக அறிந்து கொள்ளப்பட வேண்டியதுடன் மீளஏலமிடலானது தேவையற்ற தாமதங்கள் மற்றும் கிரயங்களினை குறைக்க ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்த நிபந்தனைகளின் கீழ்செய்யப்படல் வேண்டும். |
| (ஒ) | பெறுகை கையேட்டின் பிரிவு 7.9.2 இன் பிரகாரம் குறைந்தளவு மதிப்பிடப்பட்ட உரிய ஏலமானது கணிசமான அளவு எல்லையுடன் பொறியியலாளர்கள் மதிப்பீட்டை மிஞ்சியிருந்தால், பெறுகை நிறுவனமானது புதிய ஏலத்தினை கருத்தில் கொள்ள அல்லது ஏலதாரருடன் பேரம் பேச வேண்டும். இருப்பினும், பேரம்பேசப்பட்ட ஏல | பொறியியலாளர்களின் மதிப்பீடு எச்எஸ்ஆர் இனை பயன்படுத்தி தயார்க்கப்படுவதுடன் கிராமிய வீதிகளின் கிரயத்தின் மதிப்பீட்டிற்கு பயன்படுத்துவது சாத்தியமற்றதாகும். அதற்கு தேவையான முறையான பொறிமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பொறியியலாளர்களின் மதிப்பீடுகள் பெறுகை வழிகாட்டியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் யதார்த்தமானதாக இருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விலைகள் கூட பொறியியலாளர்கள் மதிப்பீட்டை விட கணிசமான அளவு உயர்வாக இருந்ததுடன் 32.8 சதவீதம் தொடக்கம் 39.7 சதவீதத்திற்கு இடையே வித்தியாசப்பட்டது. எனவே பொறியியலாளர்கள் மதிப்பீடானது சரியான முறையில் தயார்க்கப்படவில்லை என்பதுடன் விலை பேரம்பேசலானது சரியான முறையில் நடாத்தப்பட்டிராமையும் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஓ) | ஓர் குறித்த ஒப்பந்ததாரர் வடமாகாணத்திலுள்ள 08 ஒப்பந்த பொதிகளில் கணிசமானளவு பொறுப்புதாரராக காணப்பட்டதுடன் டிஈசின் மதிப்பீட்டின் பிரகாரம், 08 சம்பந்தப்பட்ட ஒப்பந்த பொதிகளிற்கான தேவையான சராசரி வருடாந்த நிர்மான வருமானமானது (ஏஏசீடிஓ) ரூபா 23,200 மில்லியனாகவிருந்தது. ஆனால் ஏலதாரரின் சராசரி வருடாந்த நிர்மான வருமானமானது ரூபா 22,700 மில்லியனாக மாத்திரம் இருந்தது. இருப்பினும், பெறுகை குழு மேற்கூறிய நெருக்கடியான அடிப்படையினை கருத்தில்கொள்ளாது செயற்திட்ட பணிப்பாளரின் கருத்துறைகளை கருத்தில் கொண்டு அவ் ஒப்பந்தாரரிற்கு அனைத்து 08 பொதிகளையும் கையளிக்க தீர்மானித்திருந்தன. மேலும், உண்மையான ஒப்பந்தகாலம் 08 ஒப்பந்த பொதிகளிலுள்ள அனைத்து 141 வீதிகளில் 96 சதவீதத்தினால் முடிவடைந்திருந்தும், 06 வீதிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 84 வீதிகளின் பௌதீக செயலாற்றல் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 75 சதவீதத்திற்கு கீழாக காணப்பட்டிருந்தது. | குறித்த ஒப்பந்ததாரரிற்கு அனைத்து 08 ஒப்பந்த பொதிகளினையும் கையளிப்பதிலுள்ள ஆபத்தானது மிகவும் குறைவு என செயற்திட்ட முகமைத்துவ பிரிவு மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழு என்பனவற்றினால் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், மறு ஏலத்திற்கு செல்வதை விட இது நன்மை பயக்கும். | ஏலநிபந்தனைகள் சில ஒப்பந்ததாரர்களிற்கு மாத்திரம் தேவையற்ற நன்மைகளை தவிர்த்து மாற்றமின்றி கடினமாக பின்பற்றப்படல் வேண்டும். |
| (ஔ) | ஒப்பந்த குறித்த நிபந்தனையின் உப பிரிவு 14.6 இன் பிரகாரம் ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இடைக்கால கொடுப்பனவு பத்திரத்தின் குறைந்தபட்ச பெறுமதி ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்த பெறுமதியில் 1.5 சதவீதமாகும். இருப்பினும், மீளாய்வண்டின் போது 49 பொதிகளின் கீழான இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களை பரிசீலனை செய்யும் போது 266 விடயங்கள் தேவையான நிபந்தனையிற்கு கீழாக | விசேடமாக கோவிட் பரவல், மூலதனங்களின் பற்றாக்குறை காரனத்தினாலான கடினமான பாதக நிலமைகளில் ஒப்பந்ததாரர்களின் காசுப்பாய்ச்சல் மிதான பாதக விளைவுகளை தவிர்க்க, வேலை வழங்குனர் கொடுப்பனவிற்கான ஓர் இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களின் குறைந்தபட்ச | கிரயம், நேரம், மற்றும் ஒப்பந்ததாரரிற்கான தேவையற்ற நன்மைகளை குறைப்பதற்கு ஒப்பந்த நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்ட விடயங்களை கடைப்பிடித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | தொகையுடன் தொடர்புபட்ட உபபிரிவினை தளர்த்த வேண்டியிருந்தார். | |
| (க) | ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 14.7 இன் பிரகாரம் வேலை வழங்குனர்கள் ஒவ்வொரு ஐபிசி களிலும் உள்ள உறுதிப்படுத்தப்பட்ட தொகைகளை 56 நாட்களுக்குள் செலுத்துவார்கள். கூறப்பட்ட படி கொடுப்பனவுகள் கிடைக்கப்பெறாவிட்டால் ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த நிபந்தனையின் உபபிரிவு 14.8 இன் அடிப்படையில் தாமத காலப்பகுதியன் போதான செலுத்தப்படாத தொகை மீது நிதிக்கட்டணங்களை பெற்றுக்கொள்ள உரித்துடையவராவார். அதனடிப்படையில் 36 இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களில் கூறப்பட்ட நேரத்திற்கு பின்னால் 01 தொடக்கம் 68 நாட்கள் என்றவீச்சிலான தாமதம் மீளாய்வாண்டின் போது அவதானிக்கப்பட்டது. | எவ்வித ஒப்பந்ததாரர்களும் கொடுப்பனவுகளின் தாமதத்திற்காக வட்டியினை பெற்றிருக்கவில்லை. | தேவையற்ற சத்தியமான கிரயங்களை குறைப்பதற்கு ஒப்பந்த நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்ட விடயங்களை கடைப்பிடித்தல் வேண்டும். |
| (ங) | செயலாற்றல் பாதுகாப்பு பத்திரம் ஒப்பந்ததாரரினால் அவரது சொந்த செலவில் வழங்க வேண்டியிருந்தும், ஒப்பந்ததாரரினால் மீளப்பெற முடியுமான ஆரம்ப மற்றும் பொது உருப்படிகளின் கீழான அளவைப்பட்டியலில் ஓர் தனியான கொடுப்பனவு உருப்படி செய்யப்பட்டிருந்தமை ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 இற்கு முறணாக கானப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அதன்படி மொத்தமாக ரூபா 85.64 மில்லியன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தின் மீதான கிரயத்தினை மீளபெற்றுகொள்வதற்கு ஊவா மாகாணத்திலுள்ள ஒப்பந்ததாரரிற்கு செலுத்தப்பட்டிருந்தது. | வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மற்றும் ஏனைய எதிர்கால ஒப்பந்தங்கள் என்பவற்றின், இவ் உருப்படிகள் பீஓகியுவ்விலிருந்து நீக்கப்பட்டுள்ளது. | நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏற்பட்ட நட்டங்களை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ச) | பொறியியலாளர் மதிப்பீடு, விலைமனு ஆவணங்கள் மற்றும் அளவைகள் பட்டியல் என்பன அரச பெறுகை வழிகாட்டியின் உப பிரிவு 2.4 மற்றும் 2.6 இன் பிரகாரம் பெறுகைக்குழு மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்தும், பொறியியலாளர் மதிப்பீடுகள் ஏல ஆவணங்கள் மற்றும் அளவைப் பட்டியல்கள் போன்றவற்றில் உருப்படிகளில் விகித முரண்பாடுகள் | ஆசிய அபிவிருத்தி வங்கியின் பெறுகை வழிகாட்டியின் பிரகாரம், இவ்வித்தியாசம் போட்டி அலகு (வீதம்) விகித வரையறையை மிஞ்சியிராததுடன் மதிப்பாய்வு அல்லது குறைக்க முடியாது. | மேற்கூறிய படி. |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் பிழையான விளக்கம் என்பன அவ் வழிகாட்டிகளிற்கு முரணாக இருந்ததன் காரணமாக 02 ஒப்பந்த பொதிகளுடன் தொடர்புபட்டு 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிகழ்ச்சித்திட்டத்தினால் ரூபா 48.2 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. | | |
| (ஞ) | அனைத்து ஆய்வுகூடம், தளபாடம் மற்றும் சில அளவை உபகரணங்கள் ஒப்பந்த நிபந்தனைகளின் உப பிரிவு 108.4 மற்றும் 120.7 இன் பிரகாரம் நிகழ்ச்சித்திட்ட முடிவில் ஒப்பந்ததாரரிற்கு திருப்பி அனுப்பபட வேண்டியிருந்தும், 2021 திசெம்பர் 31 இல் உளளவாறு மொத்தமாக ரூபா 932.98 மில்லியன் மற்றும் ரூபா 16.23 மில்லியன் ஒட்டுமொத்தமாக முறையே ஆய்வுகூடம் தளபாடம் மற்றும் நிலஅளவை உபகரணங்களிற்கு செலுத்தப்பட்டிருந்தது. இதனால் அசாதாரண ஒப்பந்த நிபந்தனைகள் ஒப்பந்ததாரர்களிற்கு தகாத நன்மைகளை ஏற்படுத்தலாம் என்பதை அது சுட்டிக்காட்டலாம். | எதிர்கால ஒப்பந்தங்களில், ஒப்பந்தம் கையளிக்கப்பட்டதன் பின்னர் பீஓகியுவ் இல் அவ்உருப்படிகளை பயன்படுத்துவதனை தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், சாத்தியமற்றதாகவிருந்தும், தனிப்பட்ட உருப்படிகளின் பேச்சுவார்த்தையிற்காக அனுமதிப்பதற்கு அவர்களின் ஏல மதிப்பாய்வு வழிகாட்டிகளை திருத்த ஏடிபீஇற்கு வேண்டுகோள் விடுவிக்கப்படும். | ஒரு பொது நடைமுறையாக, உரிய சொத்துக்கள் தொழில் வழங்குனரால் தக்கவைத்துக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான ஒப்பந்ததாரரின் கிரயம் ஏனைய நன்கொடை வழங்கும் செயற்திட்டத்தினால் கையளிக்கப்பட்ட ஏனைய ஒப்பந்த பொதிகளின் கிரயத்துடன் ஒப்பிடும் போது குறைக்கப்படல் வேண்டும். |
| (ட) | 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மானத்துறை அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் வெளிநாட்டு ஒப்பந்ததாரர்கள் இலங்கையிலுள்ள ஏதாவது அடையாளப்படுத்தப்பட்ட நிர்மான வேலையில் ஈடுபடுவதற்கு முன்பு நிர்மான துறை அபிவிருத்தி சபையில் (சீஐபீஏ) ஓர் ஒப்பந்ததாரராக தற்காலிக பதிவினை பெற்றிருத்தல் வேண்டும். இருப்பினும், 09 ஒப்பந்ததாரர்கள் நிர்மான கைத்தொழில் துறை அதிகார சபையின் தேவைப்பாடுகளுடன் ஒத்துப்போகாமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | பெறுகை கடன் உடன்படிக்கையில் இரு தரப்பினராலும் உடன்பட்டதன் படி ஆசிய அபிவிருத்தி வங்கியின் பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் செய்யப்பட்டிருக்கும். எனவே, சீஐடிஏ வுடனான இப்பதிவு ஏலங்களை நிராகரிப்பதற்கான ஓர் அடிப்படையாக முடியாது. | ஒப்பந்தங்கள் 2014 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க நிர்மான துறை அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கையளிக்கப்படல் வேண்டும். |
| (ண) | 2006 பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் ஓர் கூட்டுமுயற்சியாக ஏலமிடும் போது அனைத்து தரப்பினர்களும் ஒப்பந்தத்தின் கீழான செயலாற்றல் பொறுப்புக்களிற்கு கூட்டாக அல்லது தனியாக கடமைப்பட்டிருந்ததுடன் பிரிவு 5.3.7 (ஆ) இன் பிரகாரம் எழுத்துமூலமான உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்க வேண்டும். ஆனால் தொழிநுட்ப ஏலங்களுடன் தொடர்புபட்டு ஒப்பந்ததாரர்களினால் அவ்வாறான எழுத்துமூலமான உறுதிப்படுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வில் | ஒப்பந்தகாலத்தின் போதான ஒப்பந்ததாரரின் செயலாற்றல் மந்தகதியாகவிருந்ததால், வேலை வழங்குனர் ஜவீ பங்குதாரரினை தொடர்பு கொள்வதுடன் அது ஒப்பந்த நிபந்தனைகளை மீறினால் ஒப்பந்தத்ததை கைவிடவும் முடியும். | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (த) | ரூபா 126.78 மில்லியன் தொகையான ஒப்படைப்பு கட்டணங்கள், மீளாய்வாண்டின் போது மீளப்பெறப்படாத பெறுவனவுகள் மீது கடன் வழங்கும் முகவரிற்கு சிக்கனமற்ற முறையில் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரான திரட்டிய ஒப்படைப்பு கட்டணங்கள் ரூபா 576.30 மில்லியனாகும். | செயற்திட்டத்தின் செயலாற்றல் நன்றாகவிருந்தால், ஒப்படைப்பு கட்டணங்கள் குறைக்க முடியுமானதுடன் கடனிற்காக ஒதுக்கப்பட்ட ஒப்படைப்பு கட்டணங்களிற்குள் பேணவும் முடியும். | செயற்திட்டத்தின் அடிப்படை திட்டத்தின் பிரகாரம், எதிர்பார்க்கப்பட்ட பணிகள் அதிகபட்ச முறையில் செய்யப்பட வேண்டியதுடன் மீளப்பெற எதிர்பார்க்கப்பட மொத்த கடன் தொகையும் பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ந) | 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் பிரகாரம் ரூபா 5 மில்லியனிற்கு அதிகமான பெறுமதி கொண்ட பொது ஒப்பந்தங்களின் விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை சேகரிக்கும் முன்னர் பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டியதுடன் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டதன் பின்னர் ஒப்பந்த பதிவினை கூட பெற்றிருத்தல் வேண்டும். செயற்திட்டமானது உரிய விலைமனுதாரர்களின் தொழிநுட்ப விலைமனுவினை பரிசீலிக்கும் போது அத் தேவைப்பாட்டினை கருத்தில் கொண்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | ஆசிய அபிவிருத்தி வங்கியின் வழிகாட்டிகளின் பிரகாரம் ஒப்பந்ததாரர்கள் ஆசிய அபிவிருத்தி வங்கி உறுப்புரிமை நாட்டில் பதிவு செய்யப்பட்ட நிர்மான கம்பனியாக தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் ஆசிய அபிவிருத்தி வங்கி யினால் கருப்புபட்டியலிடப்படவில்லை. | விலைமனுதாரர்கள் மற்றும் கையளிக்கப்பட்ட ஒப்பந்தம் என்பன பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படல் வேண்டும். |

### 3.2.3 தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பொது

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 04 சேவைப்பிரிவுகள் சாத்தியவள கற்கையில் குறிப்பிடப்பட்டிருந்தும், சுகுமன பகுதியில் வலதுபக்கத்தில் 26,475 சதுர மீற்றர் காணியும் இடதுபக்கத்தில் 33,373 சதுர மீற்றர் காணியும் மாத்திரமே கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் சேவைப்பிரிவுகளின் நிர்மானம் தெற்குஅதிவேகப்பாதை விரிவாக்கல் செயற்திட்டத்தின் எந்தகட்டத்திலும் மதிப்பிடப்பட்டிருக்காததுடன் எவ்வித பீஓகியுவ் ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை. அதன்படி தெற்கு அதிவேகப்பாதையின் 46 கி.மீகளின் பின்னர் அதிவேகப்பாதை | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் சேவைப்பிரிவுகளை தயார்செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் தேவையான படிமுறைகள் எடுக்கப்படவில்லை. இதன்காரணமாக அமைச்சு சீன எக்ஸிம் வங்கியிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது அது மேலதிக நிதி வசதிகளை வழங்க நிதிஉதவியை வழங்குகின்றது. நல்ல பதில் கிடைக்கப்பெறாததிலிருந்து மாற்று அளவீடுகள் அதற்காக | வேண்டப்பட்ட ஏற்பாடுகள் தெற்கு அதிவேகப்பாதை விரிவாக்கல் செயற்திட்டத்திற்கான சேவை பிரிவு நிர்மானத்திற்காக ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்பாட்டாளர்களிற்காக எவ்விதசேவைப்பிரிவுகளும் காணப்பட்டிருக்கவில்லை எனவே வெளிப்பன்ன தொடக்கம் ஹம்பாந்தோட்டை வரையான 176 கி.மீகள் அவர்கள் பயணம் செய்யும் போது பொதுமக்களிற்கு சேவை வழங்குவது சிக்கலான நிலைமையில் இருந்தது. | எடுக்கப்படல் வேண்டும். | |
| (ஆ) | தெற்கு அதிவேக வீதியின் நீடிப்பு செயற்திட்டத்தின் கட்டம் 3 மற்றும் 4 இல், அதிவேக வீதியின் சர்வதேச கடினத்தன்மை தொடர்பான குறிகாட்டி ஒரு கிலோ மீற்றருக்கு 1.5 – 2.3 மீற்றர் / கிமீ வீச்சில் காணப்பட வேண்டும். தொழில்நுட்ப பரிசோதனைகளுக்கமைய அந்த குறிகாட்டிகள் அடையப்பட்டிருந்த போதிலும், கள பரீட்சிப்பின் போதான அவதானிப்பின் படி அதிவேக வீதியின் சில பகுதிகளில் வீதியின் மென்மையான தன்மை வீதியில் ஓட்டத்தில் ஈடுபடும் மோட்டார் வாகனங்களின் நல்ல ஓட்ட நிலமையை பேணுவதற்காக போதுமானதாக காணப்படவில்லை. | வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் பிரிவினாலான தொழிநுட்ப ஆராய்ச்சி அறிக்கையில் அத்தொகை 0.5 மற்றும் 1.5 இற்கிடையே இருந்தது அது ஓர் மிகநல்ல மட்டமாகும். | தொழில்நுட்ப அமைப்புக் குறிப்பீடுகளை தயாரிக்கும் போது வீதியில் பயணிக்கும் வாகனங்களின் ஓட்டத் தரத்தினை சான்றுபடுத்துவததற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | செயலாற்றல் பாதுகாப்பு பத்திரம் ஒப்பந்ததாரரினால் அவரது சொந்த செலவில் செய்யப்படல் வேண்டும் எனக்கூறும் ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 இற்கு முரனாக வேறான கொடுப்பனவு உருப்படிகள் வீதி புனரமைப்பு வேலைகளின் அளவைப்பட்டியல்களில் உள்ளடக்கப்பட்டிருந்தமை செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை வழங்குவதற்கான கிரயத்தினை பெற ஒப்பந்ததாரரிற்கு முடியுமாக இருந்தது. அதன்படி கூட்டுமொத்தம் ரூபா 1,078.64 மில்லியன் ஒப்பந்ததாரர்களினால் பெறப்பட்ட செயலாற்றல் பாதுகாப்பு பத்திரங்களிற்கான கிரயத்தினை மீளப்பெற 04 கட்டங்களிற்காக ஒப்பந்ததாரர்களிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | ஓர் உருப்படி எதிர்கால ஒப்பந்த வழங்களில் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தின் மீளப்பெறல்களிற்காக உள்ளடக்கப்படமாட்டாது. | நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஏற்பட்ட நட்டத்தினை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | காணி சுவீகரிப்பு செயன்முறை 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டம் 2 மற்றும் 3 இற்காக கூட்டுமொத்தம் ரூபா 28.28 மில்லியன் மற்றும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டம் | செயற்திட்டத்தின் ஒவ்வொரு வீதிப்பிரிவிற்காகவும் தயாரிக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் தடையங்கள் நேரத்திற்கு நேரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் | காணி சுவீகரிப்பு செயன்முறையை துரிதமாக பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 1 மற்றும் 4 இற்காக கூட்டுமொத்தம் ரூபா 34.28 மில்லியன் என்பன செயன்முறையை துரிதப்படுத்துவதற்காக உத்தியோகத்தர்களிற்கு ஊக்குவிப்புக்களாக செலுத்தப்பட்டிருந்தும் காணி சுவீகரிப்பு செயன்முறை பூர்த்திசெய்யப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | அதன்படி காணி சுவீகரிப்பு செயன்முறை ஒவ்வொருகாலப்பகுதியிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவேண்டும். அதன் படி வண்டிப்பாதைக்கு மேலதிகமான களத்துடன் தொடர்புபட்ட மேலதிக சுவீகரிப்புகளிற்கான தடையங்கள் 2021 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டது. | |
| (உ) | 468 காணித்துண்டுகளிற்கான இழப்பீட்டு தொகை ரூபா 21.94 மில்லியன் மற்றும் 2113 துண்டுகளிற்கான தாமத வட்டி தொகை ரூபா 211.56 மில்லியன் என்பன 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இன்னும் செலுத்தப்படவேண்டியுள்ளது. மேலும் 27.87 சதவீத குறைந்தளவான சதவீத்தினை கொண்ட மொத்தம் 12,894 காணித்துண்டுகளில் 3,593 துண்டுகள் மாத்திரமே 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு சட்டத்தின் உபபிரிவு இல 44 இன் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் ஒவ்வொரு வீதிப்பிரிவிற்காகவும் தயாரிக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் தடையங்கள் நேரத்திற்கு நேரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன்படி காணி சுவீகரிப்பு செயன்முறை ஒவ்வொருகாலப்பகுதியிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவேண்டும். அதன் படி வண்டிப்பாதைக்கு மேலதிகமான களத்துடன் தொடர்புபட்ட மேலதிக சுவீகரிப்புகளிற்கான தடையங்கள் 2021 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டது. | மேற்கூறியபடி. |

### 3.2.4 தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 01

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஒப்பந்தத்திற்கான கடன் உடன்படிக்கையின் உபபிரிவு 2 இன் பிரகாரம் கடன் பெறுனர் கடன் வசதியில் வரையப்படாத மற்றும் ரத்துசெய்யப்படாத மிகுதிகள் மீது ஓர் ஒப்படைப்பு கட்டணத்தினை கடன் வழங்குனரிற்கு அரை வருடத்திற்கு ஒரு முறை செலுத்துவார். இருப்பினும் செயற்திட்டமானது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிவில் வேலைகளிற்கான ஐ.அ.டொலர் 19.51 மில்லியன் மற்றும் ஆலொசனை சேவை கண்காணிப்பிற்கான சீன யுஎன் 65.56 மில்லியன் போன்ற கடன் தொகையில் காணப்படும் மிகுதிக்கு எதிரான ஒப்படைப்பு கட்டணங்களிற்காக ஏற்பாடுகள் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்தவேண்டிய கடன் சேவைகள் பொதுதிறைசேறியினால் கையாளப்படுகின்றது. அதன்படி அமைச்சிலிருந்து அனுமதிக்கப்பட்ட ஒதுக்கங்களை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் பொதுத்திறைசேறியினால் கூறப்பட்ட கடன்வட்டிக்கொடுப்பனவுகள் ரூபா 528,947,408 கணக்கிடப்பட்டு 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருடாந்த | அடிப்படை திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட பணிகள் உயர்ந்த பட்ச நிலையில் செய்யப்படவேண்டியதுடன் மீளப்பெற எதிர்பார்க்கப்பட்ட மொத்த கடன் தொகையும் எதிர்கால செயற்திட்டங்களில் பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருக்கவில்லை. இருப்பினும் ரூபா 666.22 மில்லியன் தொகையான ஒப்படைப்பு கட்டணங்கள் 2016 சனவரி தொடக்கம் 2021 சனவரி வரையான காலப்பகுதிக்காக வெளிவளங்கள் திணைக்களத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. | கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. ஆனால் எதிர்வரும் வருடங்களிற்கான கடன் வட்டி கொடுப்பனவுகள் மற்றும் ஒப்படைப்பு கட்டணங்கள் என்பன திறைசேறியினால் கூறப்பட்டிருக்கவில்லை. | |
| (ஆ) | கடனின் இருப்பனவு காலப்பகுதி 2020 ஒக்டோபர் 25 காலாவதியாகி இருந்ததுடன் சிவில் வேலைகளிற்கான கொடுப்பனவுகள் கடன் இருப்பனவு காலப்பகுதியின் போது பூர்த்திசெய்யப்பட்டிராததிலிருந்து ரூபா 4,045 மில்லியன் கொடுப்பனவு அரச நிதிகளின் ஊடாக 2021 திசெம்பர் 30 இல் செய்யப்பட்டிருந்தது. மேலும் சிவில் வேலைகளிற்கான கொடுப்பனவு 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. அதன்படி நிர்மானத்திற்கான இறுதி கொடுப்பனவினை கொடுத்துதீர்ப்பதில் தாமதம் இலங்கை அரசாங்கத்திற்கு ஓர் சுமையாக இருக்கலாம். | செயற்திட்டத்தின் பாதிப்பு அறிக்கையிடல் காலப்பகுதி 2020.11.08 இல் முடிவடைந்ததுடன் செயலாற்றல் பத்திரம் பாதிப்பு குறிகாட்டி காலப்பகுதி காலாவதியானதிலிருந்து 28 நாட்களிற்குள் வழங்கப்படல் வேண்டும். பிறகு ஒப்பந்ததாரர் இறுதி பட்டியலினை சமர்ப்பிக்க வேண்டும். எனவே கடன் இறுப்பனவு காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர் சிவில் வேலைகளிற்கான கொடுப்பனவுகளை பூர்த்திசெய்வது சாத்தியமற்றதாகும். மேலும் இக்கடன் காலப்பகுதி காலாவதியாவதற்கு முன்னர் மீதமாகவுள்ள வெளிநாட்டு கடன்தொகையை பெற்றுக்கொள்ள அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. | அடிப்படை திட்டத்தின் பிரகாரம் எதிர்கால செயற்திட்டங்களில் குறித்த நேரத்திற்குள் எதிர்பார்க்கப்பட்ட பணிகள் உயர்ந்த பட்ச நிலையில் செய்யப்பட வேண்டும். |
| (இ) | வேலை வழங்குனரிடமிருந்தான முன்அனுமதி ஏதுமின்றி ஒப்பந்ததாரரினால் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டதன் காரணமாக செயற்திட்டமானது போக்குவரத்து உத்தியோகத்தர்களின் பாவனைக்கான 04 டொயோட்டா போர்சுனா வாகனங்கள், 1 மேர்ச்சன்டீஸ் பென்ஸ் வான் மற்றும் 10 பிக்கப்ஸ் போன்றவற்றிற்காக சுங்க கட்டண சலுகைகளிற்காக ஒப்பந்ததாரர்களின் தகுதியினை மறுத்திருந்தது. இருப்பினும் பின்னர் செயற்திட்டத்தின் மீது ஒப்பந்ததாரரிற்கு 02 டொயோட்டா போர்சுனா வாகனங்கள் மற்றும் 10 பிக்கப்களிற்காக செலுத்தப்பட்ட ரூபா 91.74 மில்லியன் சுங்கத்தீர்வை | ஒப்பந்த உடன்படிக்கையின் உபபிரிவு 20.2 இன் பிரகாரம் பிணக்கு இணக்க சபை நிறுவப்பட்டிருந்ததுடன் தொடர்புடைய கொடுப்பனவுகள் பிணக்கு இணக்க சபை மற்றும் நட்பிணக்க தீர்ப்பனவு சபை என்பனவற்றின் தீர்மானங்களின் பிரகாரம் செய்யப்பட்டிருந்தது. | வாகனங்களின் இறக்குமதி சுற்றறிக்கைகளின் பிரகாரம் செய்யப்படவேண்டியதுடன் முகாமைத்துவ தீர்மானங்கள் தாமதகொடுப்பனவுகளிற்கான வட்டி போன்ற மேலதிக கிரயங்களை குறைக்க உரிய நேரத்தில் எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மீளப்பெறப்பட வேண்டியதுடன் 2018 ஏப்ரல் 23 இலான பிணக்கு இணக்க சபையின் தீர்மானத்தின் அடிப்படையிலான தாமத கொடுப்பனவுகளிற்கான வட்டியாக ரூபா 27.55 மில்லியன் கூட செலுத்தவேண்டியிருந்தது. ஒப்பந்தாரரிற்கு சாதகமாக செய்யப்பட்ட பிணக்கு இணக்க சபையின் தீர்மானத்தின் பெறுபேறாக ரூபா 119.3 மில்லியன் மேலதிக கிரயம் செயற்திட்டத்தினால் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஈ) ஒப்பந்தபொது நிபந்தனையின் உபபிரிவு 20.6 இன் பிரகாரம் நடுவர் தீர்ப்பானது ஒப்பந்தவேலைகள் பூர்த்தியாவதற்கு முன்னர் அல்லது பின்னர் ஆரம்பிக்கப்படமுடியுமாயினும் குறித்த நேர காலம் திருப்தியின்மை அறிவிப்பு வழங்கப்பட்டதன் பின்னர் நடுவர் தீர்ப்பினை ஆரம்பிக்க ஒப்பந்த குறித்த நிபந்தனையில் கூட குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எனவே 6 பிணக்குகள் கொடுப்பனவு தொகை ரூபா 3,066.7 மில்லியன் திருப்பியின்மை அறிவிப்புக்கள் வழங்கப்பட்டதன் பின்னர் இன்னும் நடுவர்தீர்ப்பிற்காக திறந்துள்ளதுடன் ஒப்பந்ததாரர்களிற்கான உரிமம் செயற்திட்டத்தின் குறைபாட்டு நிவர்த்தி காலம் பூர்த்தியானதிலிருந்து 14 மாதங்கள் காலாவதியானதன் பின்னர் கூட முடிவாக்க முடியாமல் இருந்தது. அதன்படி வெளியேற்றல் கடிதம் 2021 திசெம்பர் 31 வரை கூட ஒப்பந்ததாரரினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த உடன்படிக்கையின் உபபிரிவு 20.5 இன் பிரகாரம் பிணக்கு இணக்க சபையின் தீர்மானத்தின் பின்னர் திருப்தியின்மை அறிவிப்பிலிருந்து 56 நாட்களின் பின்னர் ஒரு தரப்பினரால் வழங்கப்பட்டடுள்ளது. உரிய தரப்பினர் இணக்கத்திற்காக பிணக்கினை கூறமுடியும். ஆனால் குறிப்பிட்டளவு நேரம் அதற்காக வழங்கப்பட்டிருக்கவில்லை. எனவே ஒப்பந்த கொடுப்பனவின் உபபிரிவு 14.12 இன் பிரகாரம் ஓர் எழுத்துமூலமான வெளியேற்றல் கடிதம் இதுவரை ஒப்பந்ததாரரரினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பிணக்குகளை துரிதமாக தீர்க்கவும் விடுவிப்பு கடிதங்களை பெற்றுக்கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். |

### 3.2.5 தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 02

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| ஒப்பந்த குறித்த நிபந்தனையின் பிரிவு 21.4 இன் பிரகாரம் உபகரணம், | முன்னை நாள் செயற்திட்ட பணிப்பாளர் இலங்கை சுங்க | மீள்ஏற்றுமதி செயன்முறையை பூர்த்திசெய்ய அல்லது |

| | | |
|---|---|---|
| ஒப்பந்ததாரரினால் இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரம், வாகனங்கள், மூலப்பொருட்கள் அனைத்து உதிரிப்பாகங்கள் மற்றும் சிவில் வேலைகளில் பயன்படுத்தக்கூடிய அனைத்து ஏனைய நுகரத்தக்கவைகள் என்பன சுங்கத்தீர்வைகளிலிருந்து விலக்கலிக்கப்படுவதுடன் அவ் உருப்படிகள் ஒப்பந்ததாரரினால் செயற்திட்ட முடிவில் மீள்ஏற்றுமதி செய்யப்படல் வேண்டும். இருப்பினும் செயற்திட்டத்தின் குறைபாட்டு நிபர்த்தி காலம் கூட 2021 பெப்ரவரி 24 இல் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 66 பற்றுச்சீட்டுக்களின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட உருப்படிகளில் 2 பற்றுச்சீட்டுக்கள் மாத்திரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீள் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது. | திணைக்களத்தினால் தொடர்புடைய வரிகளை வழங்குவதற்கான செயன்முறையினை துரிதப்படுத்த 2022 மார்ச் 8 இல் இலங்கை சுங்க திணைக்கள பணிப்பாளர் நாயகத்துடன் விசேட கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். அதன்படி இலங்கை சுங்க திணைக்களம் தொடர்புடைய வரிகளின் வழங்களினை பூர்த்திசெய்திருந்ததுடன் ஒப்பந்த கம்பனி தொடர்புடைய வரிகளினை செலுத்திக்கொண்டிருக்கின்றது. | தொடர்புடைய வரிகளை செலுத்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும். |

### 3.2.6 தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 04

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) ஒப்பந்தபொது நிபந்தனையின் உபபிரிவு 20.6 இன் பிரகாரம் நடுவர் தீர்ப்பானது ஒப்பந்தவேலைகள் பூர்த்தியாவதற்கு முன்னர் அல்லது பின்னர் ஆரம்பிக்கப்படமுடியுமாயினும் குறித்த நேர காலம் திருப்தியின்மை அறிவிப்பு வழங்கப்பட்டதன் பின்னர் நடுவர் தீர்ப்பினை ஆரம்பிக்க ஒப்பந்த குறித்த நிபந்தனையில் கூட குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எனவே மூன்று (03) பிணக்குகள் கொடுப்பனவு தொகை ரூபா 509.05 மில்லியன் திருப்பியின்மை அறிவிப்புக்கள் வழங்கப்பட்டதன் பின்னர் இன்னும் நடுவர்தீர்ப்பிற்காக திறந்துள்ளதுடன் ஒப்பந்ததாரர்களிற்கான உரிமம் செயற்திட்டத்தின் குறைபாட்டு நிவர்த்தி காலம் பூர்த்தியானதிலிருந்து 2 வருடங்கள் காலாவதியானதன் பின்னர் கூட முடிவாக்க முடியாமல் இருந்தது. எனவே ஒப்பந்த நிபந்தனையின் உபபிரிவு 14.12 இன் பிரகாரம் வெளியேற்றல் கடிதம் 2021 | திருப்தியின்மைக்கான அறிவிப்புக்கள் பிணக்கிணக்க சபைக்கு ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட 3 கொடுப்பனவுகளிற்காக அதனால் வழங்கப்பட்ட தீருமானங்களிற்கு ஒப்பந்ததாரரினால் வழங்கப்பட்டது. ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் தீர்ப்பனவுகள் நடுவர் தீர்ப்பினால் செய்யப்படவேண்டியிருந்தும் ஒப்பந்ததாரர் நடுவர் தீர்ப்பு 2021 திசெம்பர் 31 வரை ஆரம்பிக்கப்பட்டிருந்ததாக அறிவித்திருக்கவில்லை. எனவே ஒப்பந்ததாரர் எழுத்து மூலமான விடுவிப்பு ஒன்றை வழங்கியிருக்கவில்லை. | திருப்தியின்மைக்கான ஓர் அறிவிப்பு வழங்கப்பட்டதன் பின்னர் நடுவர் தீர்ப்பினை ஆரம்பிப்பதற்கான ஓர் குறித்த நேர வரையறை குறித்த நிபந்தனைகளிற்குள் உள்ளடக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 31 வரை கூட ஒப்பந்ததாரரினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 31 அனுமதிகளுடன் தொடர்புபட்ட ஐ.அ.டொலர் 1,415,215 தொகையான மீள் ஏற்றுமதி உருப்படிகள் 2018 ஆம் ஆண்டில் கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. இருப்பினும் எவ்வித உறுதிப்படுத்தல்களும் அவ்உருப்படிகளின் தேவைப்பாட்டுடன் தொடர்புபட்டு அச்செயற்திட்ட பணிப்பாளரினால் பெறப்பட்டிருந்ததுடன் அச்சொத்துக்களின் கிடைப்பணவிற்கான ஆதாரம் கணக்காய்விற்காக காணப்பட்டிருக்கவில்லை. | பல்வேறு பொருட்கள் தேவையான அனுமதியுடன் கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் ஓர் வேண்டுகோள் அதனை நிரூபிக்க தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்க 2021 சனவரி 26 இல் செய்யப்பட்டிருந்தது ஆனால் அது இன்னும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. அது ஆவணங்கள் கிடைக்கப்பெற்றவுடன் மிகவிரைவாக வழங்கப்படும். | அப்பொருட்களின் தேவைப்பாட்டுடன் தொடர்புபட்ட மற்றும் அப்பொருட்களிற்கான பெறுவனவு என்பவற்றிற்காக ஓர் உறுதிப்படுத்தல் பெறப்படல் வேண்டும். |
| (இ) | ஒப்பந்தத்திற்கான கடன் உடன்படிக்கையின் உபபிரிவு 2(2.7) இன் பிரகாரம் பிரிவு 2.2 இல் குறிப்பிடப்பட்ட படி கடன்தாரர் கடன் வசதியில் வரையப்படாத மற்றும் ரத்துசெய்யப்படாத மிகுதிகள் மீது ஓர் ஒப்படைப்பு கட்டணத்தினை கடன் வழங்குனரிற்கு அரை வருடத்திற்கு ஒரு முறை செலுத்துவார். இருப்பினும் செயற்திட்டமானது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிவில் வேலைகளிற்கான ஐ.அ.டொலர் 116 மில்லியன் கடன் தொகையில் காணப்படும் மிகுதிக்கு எதிரான ஒப்படைப்பு கட்டணங்களிற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. இருப்பினும் ரூபா 430.96 மில்லியன் தொகையான ஒப்படைப்பு கட்டணங்கள் 2016 சனவரி தொடக்கம் 2021 சனவரி வரையான காலப்பகுதிக்காக வெளிவளங்கள் திணைக்களத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. | அபிவிருத்தி மும்மொழிவுகள் மிகுதி கடன் தொகை ஐ.அ.டொலர் 116 மில்லியனிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் கடன்வழங்கும் முகவர் அதனை ஏற்றுக்கொண்டிருக்கவில்லை எனவே ஐ.அ.டொலர் 116 மில்லியன் சேமிப்புக்கள் ஒப்பந்த ஆரம்பத்தில் வெளிப்படுத்தப்பட்டிராததுடன் அவ்வாறிருந்தால் ஒப்பந்தம் எவ்வாறு செய்வதென்று கூறமுடியாமலிருக்கும். | அடிப்படை திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட பணிகள் உயர்ந்த பட்ச நிலையில் செய்யப்படவேண்டியதுடன் மீளப்பெற எதிர்பார்க்கப்பட்ட மொத்த கடன் தொகையும் எதிர்கால செயற்திட்டங்களில் பயன்படுத்தப்படல் வேண்டும். |

### 3.2.7 மத்திய அதிவேகப்பாதை செயற்திட்டம் - பகுதி 01

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் ஒப்பந்ததாரர் - சீன உலோகவியல் பொது நிறுவனத்தினால் (எம்சீசீ) வடக்கு அதிவேகப்பாதையின் பொதி 7 மற்றும் பொதி 4 இன் நிர்மானத்தின் கீழ் ஏற்பட்ட செலவுகளிற்காக கொடுப்பனவு செய்ய இயலாமை காரணமாக அமைச்சரவை அமைச்சர்களின் அனுமதி பெறுகை வழிகாட்டியிற்கு முரணாக 2015 ஜூலை 16 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மான இல. 15/1021/602/040 இன் கீழாக ரூபா 158,386 மில்லியன் கிரயத்தில் மத்திய அதிவேகப்பாதை பிரிவு I இற்காக வழங்கப்பட்டிருந்தது. | மத்திய அதிவேகப்பாதையின் பிரிவு I இற்கான ஒப்பந்தத்தின் கையளிப்பிற்கு முன்னர் 2015 ஜூலை 16 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மான இல. 15/1021/602/040 பொதுத்திறைசேறியின் ஆலோசனையுடன் பொருளாதார அலுவல்கள் மீது நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவினால் பரிந்துரைக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் பெறப்பட்டிருந்ததுடன் அதன்படி அதிவேக செயற்திட்டத்தின் பிரிவு I இற்கான ஒப்பந்தம் முறையாக கையளிக்கப்பட்டிருந்தது. | ஒப்பந்தங்கள் பெறுகை வழிகாட்டிகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் கையளிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பொருளாதார சாத்தியவள கற்கை மத்திய அதிவேகப்பாதை செயற்திட்டத்தின் அனைத்து பிரிவுகளிற்குமாக ஒரே நேரத்தில் செய்யப்பட்டிருந்தது. அதனை தயாரிக்கும் போது செயற்திட்டத்தின் நிர்மான காலப்பகுதி 2014 தொடக்கம் 2020 வரையும் செயன்முறை காலப்பகுதி 2020 தொடக்கம் 2046 வரையும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பகுப்பாய்வுகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் 483.32 பில்லியனாக இருந்ததுடன் மொத்த பயன் ரூபா 683.38 பில்லியனாக இருந்தது. அதன்படி செயற்திட்டத்தின் தேறிய இற்றை பெறுமதி ரூபா 200.06 மில்லியனாகவிருந்தது.<br>இச்செயற்திட்டம் ஓர் சிக்கனமான சாத்தியமாக கருதப்பட்டிருப்பினும் பொருளாதார சாத்தியவள ஆய்வு அறிக்கையின் இடர் மதிப்பீட்டின் பிரகாரம் செயற்திட்டத்தின் நிர்மான தாமதங்களின் காரணமாக இக்கணிப்பு மாற்றப்படுவதனால் ஓர் இடர் இருக்கலாம் என கணக்காய்வில் அலட்சியப்படுத்தமுடியாமலிருக்கும். | பொருளாதார சாத்தியவள கற்கை செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு ஓர் அடிப்படை ஆவணமாக இருந்ததனால் இவ் வீதி நிர்மானத்தின் பின்னர் அரச கொள்கைகள் மாற்றங்கள் மற்றும் பொருளாதார நிலமைகளில் மாற்றங்கள் போன்றன காரணமாக ஓர் பிரதான காரணியாக இவ்வீதியுடன் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளின் அடிப்படையிலான எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள் மற்றும் இலக்குகளில் மாற்றங்களை அலட்சியப்படுத்துவது சாத்தியமற்றதாகும். | செயற்திட்டத்தில் நிர்மான தாமதங்களை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சட்டமாஅதிபர் வெளிவளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிய 2018 ஒக்டோபர் 02 ஆம் திகதிய அவரது கடிதத்தில் வரைவு கடன் உடன்படிக்கையின் பிரிவு 8.1 மற்றும் 8.4 உடன் தொடர்புபட்ட முறையே கட்டளையின் விலக்கு மற்றும் ஆலும் சட்டம் என்பனவற்றினை விசேடமாக திருத்த வேண்டுகோள் விடுத்திருந்தார். இருப்பினும் கடன் வழங்கும் முகவர் (எக்ஸிம் வங்கி) மும்மொழியப்பட்ட திருத்தங்களை ஏற்றுக்கொண்டிருக்காததுடன் உடன்படிக்கை அத்திருத்தங்கள் இல்லாமல் வரைபு உடன்படிக்கையில் மும்மொழியப்பட்ட படி இரு தரப்பினர்களினாலும் கையொப்பமிடப்பட்டிருந்தது. | பிரதமரினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் அமைச்சரவை எம்சீசீ கம்பனிக்கு இவ்ஒப்பந்தத்தினை கையளிக்க அனுமதித்திருந்தது. அதன்படி இவ் ஒப்பந்தத்தினை கையளிப்பதற்காக சட்டமாஅதிபரினால் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களை கணக்கிற்கு கொண்டுவந்ததன் பின்னர், நிதியமைச்சு மற்றும் பொதுத்திறைசேறியின் வெளிவளங்கள் திணைக்களம் என்பனவற்றினால் உடன்படிக்கை அடையப்பட்டதன் பின்னர் ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் எதிர்கால உடன்படிக்கைகளில் முறையாக திருத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | நிர்மான செயன்முறை. | | |
| (i) | கடவத்த தொடக்கம் கொஸ்சின்ன வரையான பொதி 1 இன் ஒப்பந்தம் 2016 ஜுன் 20 இல் கையொப்பமிடப்பட்டிருந்ததுடன் வேலைகளின் ஆரம்பிப்பு 2020 செப்டம்பர் 15 வரை தாமதித்திருந்தது. மேலும் ஒப்பத்தத்தின் எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் திகதி 2023 மார்ச் 14 ஆகவிருக்கும். 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆரம்பிப்பு திகதியிலிருந்து 15 மாதங்கள் கடந்திருந்தும் உண்மையான பௌதீக செயலாற்றல் இலக்கிடப்பட்ட 30.53 சதவீதத்தில் 15.07 சதவீதமாக மாத்திரம் இருந்தது. | கோவிட் 19 விளைவு, பாதகமான காலநிலை, காணி சுவீகரிப்பில் உரிய தரப்பினர்களை தொடர்பு கொள்வதில் சிக்கல்கள், மூலப்பொருட்களில் பற்றாக்குறை, வெளிநாடுகளிலிருந்து ஒப்பந்ததாரரினால் இறக்குமதி செய்யப்பட்ட பல்வேறு மூலப்பொருட்களினை இடம்மாற்றுவதில் கடினங்கள் மற்றும் பொதுமக்கள் ஆர்பாட்டங்கள் போன்றன காரணமாக இலக்கிடப்பட்ட செயலாற்றலை அடைவது சாத்தியமற்றதாகும். | இலக்கிடப்பட்ட செயலாற்றலை அடைந்து கொள்ள நிர்மான ஒப்பந்தங்களை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | கொஸ்சின்ன தொடக்கம் மீரிகம வரையான பொதி 02 இன் ஒப்பந்தம் 2015 ஆகஸ்ட் 04 இல் கையொப்பமிடப்பட்டிருந்ததுடன் வேலைகளின் ஆரம்பிப்பு 2020 செப்டம்பர் 15 வரை தாமதித்திருந்தது. மேலும் ஒப்பத்தத்தின் எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் திகதி 2024 செப்டம்பர் 14 ஆகவிருக்கும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆரம்பிப்பு திகதியிலிருந்து 15 மாதங்கள் கடந்திருந்தும் உண்மையான பௌதீக செயலாற்றல் இலக்கிடப்பட்ட 30.46 சதவீதத்தில் 20.54 சதவீதமாக மாத்திரம் இருந்தது. | மேற்கூறியபடி. | மேற்கூறியபடி. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | செயற்திட்டத்தின் சிவில் வேலைகளிற்கான நிதிகள் 2019 மார்ச் 21 இல் கையொப்பமிடப்பட்ட ஓர் கடனாக சீன எக்ஸிம் வங்கியினால் வழங்கப்படுகின்றது. ஆனால் கடன் மீளப்பெறல்கள் 2021 திசெம்பர் 31 வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் பெறுபேறாக பொதி 01 மற்றும் பொதி 02 இன் விலைத்தளம்பல்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்ததாரரிற்கு செலுத்தப்படல் வேண்டும். அது ரூபா 470.62 மில்லியன் தொகையாக இருந்தது. | மேற்கூறியபடி. | மேற்கூறியபடி. |
| (உ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 இன் பிரகாரம் ஒப்பந்தத்தின் முறையான செயலாற்றலிற்கான செயலாற்றல் பாதுகாப்பு ஒப்பந்ததாரர் அவரது சொந்த கிரயத்தில் பெறவேண்டி இருப்பினும் செயற்திட்டமானது அளவைப்பட்டியலில் ஒரு தனியான உருப்படியாக உள்ளடக்கியிருந்தமை மேற்கூறிய தேவைப்பாட்டிற்கு முறனாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அதன் பெறுபேறாக கூட்டு மொத்தம் ரூபா 805.43 மில்லியன் அவ் இரண்டு பொதிகளிற்காகவும் கொடுப்பனவு உருப்படி 110(1) இன் கீழ் செலுத்தப்பட்டிருந்ததுடன் அது ஒப்பந்ததாரரிற்கு தேவையற்ற நன்மைகளிற்கு வழிவகுக்கும். | இத்தொகை வேறாக காட்டப்படாமல் இருந்தால் இது மற்றைய உருப்படிகளின் பெறுமதிகளுடன் சேர்க்கப்படுவதுடன் ஒப்பந்தவிலையில் இருந்து பெறப்படும். மேலும் இத்தொகை வேறாக காட்டப்பட்டிருந்தால் நிர்மான கிரயத்தின் உண்மையான நிலைமை ஒப்பந்ததாரரினால் கூறப்பட வேண்டியிருக்கும் எனவே அவ்விலைகளின் நியாயத்தன்மை அதேவகையான ஒப்பந்தங்களுடன் அவ்விலைகளை ஒப்பிடும் போது தீர்மானிக்கமுடியுமானதுடன் எதிர்கால ஒப்பந்தங்களின் விலைகளை மதிப்பிடும் போதும் பொறியியலாளர் மதிப்பீடுகளை தயாரிக்கும் போதும் அவ்விலைகளின் உண்மையான கிரயத்தினை அறிவதற்கு பயனுள்ளதாகவிருக்கும். | செயற்திட்டத்திற்கு ஏற்பட்ட மேலதிக கொடுப்பனவுகளை மீட்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல 01/2019 இன் பந்தி 9.3 இன் பிரகாரம் செயற்திட்ட திசைமாற்றல் குழு 2 மாதங்களுக்கு ஒரு முறையாவது சந்திக்க வேண்டியிருந்தும் திசைமாற்றல் குழு மீளாய்வாண்டின் போது 2021 நவம்பர் 30 இல் மாத்திரமே சந்தித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | நாட்டிலுள்ள கோவிட் நிலமை காரணமாக சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்த காலத்தில் செயற்திட்ட திசைமாற்றல் குழு கூட்டத்தினை நடாத்த முடியாமலிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (எ) | செயற்திட்டத்தின் நேரப்பட்டியலின் பிரகாரம் காணி சுவீகரிப்புக்கள் செயற்திட்டத்தின் ஆரம்பகட்டத்தில் செய்யப்படல் வேண்டும். காணி சுவீகரிப்பு நிபுனர்கள் செயற்திட்ட கண்கானிப்பு பிரிவு உத்தியோகத்தர்களாக | ஐயவினாவின் உண்மைகள் சரி. இருப்பினும் ஓர் முழு நேர உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு மாதாந்த சம்பளம் செலுத்தப்படாவிட்டால் தேவையான நேரத்திற்காக மாத்திரம் சேவைவகளை | மேலதிக கிரயங்கள் சேவை தேவைப்பாடு அடிப்படையில் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் உத்தியோகத்தர்களின் கீழ் உரிய ஆட்சேர்ப்புக்களை செய்வதனூடாக |

| | | | |
|---|---|---|---|
| | ஆட்சேர்க்கப்பட வேண்டியிருந்தும் இரண்டு நிபுனர்கள் ஆலோசகர் உத்தியோகத்தரின் கீழ் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் கூட்டுமொத்தம் ரூபா 6,399,250 செலுத்தப்பட்டிருந்தது. மேலும் செயற்திட்டம் ஓர் மேலதிக கிரயத்தினை செய்யவேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஏனென்றால் 10 சதவீத மேலதிக தொகை ஆலோசகருக்கு செய்யப்பட்ட கொடுப்பனவுகள் மீது மேந்தலை கிரயமாக விதிக்கப்பட்டடுள்ளது. | பெற்றுக்கொள்வதற்கு அதிக பொருளாதார ரீதியாக வினைத்திறனாக இருக்கும் என கூற முடியும். | குறைக்கப்படல் வேண்டும். |
| (ஏ) | ஆரம்ப கட்டத்தில் காணி சுவீகரிப்பு செயன்முறை செயற்திட்ட நேர பட்டியலின் பிரகாரம் 2016 திசெம்பர் 15 இல் பூர்த்திசெய்ய திட்டமிடப்பட்டிருந்ததுடன் ரூபா 30 மில்லியன் தொகையான ஊக்குவிப்புக்கள் 26 வாரங்களிற்குள் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தி பூர்த்திசெய்வதற்காக அமைச்சு, நிலஅளவைதிணைக்களம், மதிப்பீட்டுதிணைக்களம் மற்றும் பிரதேச செயலகங்கள் என்பவற்றின் உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் 364 காணித்துண்டுகளின் உரிமை மாத்திரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றப்பட்டிருந்தது. | இது பிரதேச செயலகங்களினால் செய்யப்படவேண்டிய ஓர் வேலையானதுடன் தற்போது பதிவு செய்தல் மீதமான துண்டுகளிற்காக விரைவாக செய்யப்படுகின்றது. | காணி சுவீகரிப்பு செயன்முறையை விரைவாக பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஐ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொள்வனவு செய்ய திட்டமிடப்பட்டிருந்த 6,733 மொத்த காணித்துண்டுகளில் உள்ளடக்கப்பட்டிருந்த 4,210 தனியார் காணித்துண்டுகளில் 89 தனியார் காணித்துண்டுகளிற்கான உரிமை விசாரனைகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட செய்யப்பட்டிருக்கவில்லை மேலும் தாமதத்திற்கான காரணங்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | காணி சுவீகரிப்பில் ஈடுபட்ட மூன்றாம் நபர் உத்தியோகத்தர்களை தொடர்புகொள்வது ஓர் கடினமான வேலையானதுடன் காணி உரிமையாளர்கள் உரிமையினை உறுதிப்படுத்தாது தொடர்புடைய எழுத்துமூலமான ஆவணங்களை முறையாக வழங்கியிராததனால் சுவீகரிப்பு செயன்முறை 89 காணித்துண்டுகளிற்காக தாமதமடைந்திருந்தது. இச்செயன்முறை 2022 பெப்ரவரி முடிவில் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. | மேற்கூறியபடி. |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | செயற்திட்டமானது சாலை வாராவரிகள், நிலக்கீழ் பாலங்கள் என்பவற்றிற்கு பல்வேறு கட்டமைப்பு மாற்றங்களினை மும்மொழிவு செய்து அவைகளை கடந்த சில வருடங்களாக வெள்ள பாதிப்புகள் அனுபவிக்கப்பட்டதன் காரணமாக நிர்மானங்கள் மீது பொதுமக்கள் ஆர்பாட்டங்கள் ஏற்பட்டிருந்ததன் பின்னர் மேலதிக மீளாய்விற்காக இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. ஓர் ஒருங்கிணைந்த நீரியல் கற்கை ரூபா 71 மில்லியன் கிரயத்தில் 2017 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த மத்திய அதிவேகப்பாதைக்காக இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தினால் செய்யப்பட்டிருந்தும் ஆரம்ப கற்கையின் தோல்விகள் அந்நிறுவனத்தின் ஆலோசனையுடன் அமுல்படுத்த மும்மொழியப்பட்ட தற்போதய திருத்தங்களிற்கான காரணங்கள் என்பன தொடர்பான ஆதாரங்கள் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் மத்திய அதிவேகப்பாதையின் இப்பிரிவு 1 இன் நிர்மான வேலையை ஒப்பந்ததாரர் ஆரம்பித்திருந்த போது காணி முன்னர் மும்மொழியப்பட்ட அதிவேகப்பாதையின் மாற்றம் காரணமாக மாற்றம் செய்யப்பட வேண்டியிருந்தது. மேலும் மீண்டும் வெள்ள நிலமை ஏற்பட்டதனால் மற்றும் உள்ளுர் வசிப்பாளர்களின் வேண்டுகோளின் பிரகாரம் எஸ்எல்ஆர்டிசி மீண்டும் தளத்தினை பரீட்சித்து தேவையான மாற்றங்களிற்காக அறிவுறுத்தல்களை வழங்கியிருந்ததுடன் நிர்மான நடவடிக்கைகள் மீதான மாற்றங்கள் தற்போது செய்யப்படுகின்றன. | மாற்றங்கள் உரிய திருத்தங்களுடனான ஒருங்கிணைந்த நீரியல் கற்கை அறிக்கைகளினை கருத்தில் கொண்டு நிர்மான வேலையில் செய்யப்படல் வேண்டும். |
| (ஓ) | ஒருங்கிணைந்த நிர்மான உடன்படிக்கை 2016 ஆகஸ்ட் 18 இல் இரண்டு பொதிகளுக்காகவும் கையொப்பமிடப்பட்டிருந்தும் ஒருங்கிணைந்த நீரியல் கற்கை 2021 வரை தாமதமடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. இதனால் அக்கற்கைகளின் தாமதங்கள் மற்றும் பரிந்துரைகளின் அமுல்படுத்தல் நிர்மானப்பிரிவில் கடந்தகாலங்களில் பல்வேறு வெள்ள அபாயங்களை வெற்றிகொள்வதை நேரடியாக தாக்கியிருந்ததை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டமானது 2002 சனவரியில் இக்கற்கையின் இறுதி அறிக்கையினை பெற்றிருந்தது. | தொடர்புடைய அறிக்கைகள் உரிய நேரத்தில் பெறப்படவேண்டியதுடன் அதன்படி நிர்மான வேலைகள் துரிதப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஔ) | பயிலட் வீதிகளிற்காக ஓர் நீரியல் கற்கையை நடாத்த கூட்டுமொத்தம் ரூபா 45,28,800 வில் இலங்கை காணி மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்துடன் (எஸ்எல்எல்டிசி) 2017 மார்ச் 14 இல் ஓர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் கூட்டுமொத்தம் ரூபா 2,000,000 2017 ஜூலை 24 இல் ஓர் முற்பண கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. | வழங்கள் வீதிகளின் நிர்மானத்தினூடாக ஏற்பட்ட விளைவுகளை கற்க ஒருங்கிணைந்த நீரியல் கற்கைகள் 2017 இல் ஆரம்பிக்கப்பட்டு தற்போது செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றது. செயற்திட்டமானது இன்னும் இறுதி அறிக்கையினை பெற்றிருக்கவில்லை. | தொடர்புடைய அறிக்கைகள் உரிய நேரத்தில் பெறப்படவேண்டியதுடன் அதன்படி நிர்மான வேலைகள் துரிதப்படுத்தப்படல் வேண்டும். |

ஒப்பந்தகாலப்பகுதி 24 மாதங்களாக இருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 வருடங்களிற்கு மேல் கடந்திருந்தும் ஆதாரங்கள் இறுதியறிக்கை செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்டு நீரியல் கற்கையின் மொத்த கிரயம் என்பன தொடர்பாக கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2.8 மத்திய அதிவேகப்பாதை செயற்திட்டம் - பகுதி 03

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிர்மானித்தல், செயற்படுத்தல் மற்றும் மாற்றம் செய்தல் (பீஓடி) மீதான மும்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு அதனது கருத்துக்களை வெளிப்படுத்தும் எவிக்-செக் ஜேவி முதலீட்டாளரிற்கு வழங்கப்பட்ட ஏல ஆவணங்களின் ஏற்றுக்கொள்ளளிற்கான காலம் மற்றும் 2021 சனவரி 19 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மான இல சீபி/20/2072/319/021 இன் கீழ் பொறியியல், பெறுகை மற்றும் நிர்மான(ஈபிசீ) அடிப்படை என்பன 2021 சனவரி 20 வரை நீடிக்கப்பட்டிருந்தது. பின்னர் இப்பிரிவினை அமுல்படுத்துவதில் நீண்ட தாமதத்தினை கருத்தில் கொண்டு நேரடியாக அல்லது உபஒப்பந்ததாரர்களூடாக உரிய வேலைகள், சேவைகள் மற்றும் பொருட்களினால் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக மொத்தம் 31.7 கி.மீகளில் பிரிவு 0+840 தொடக்கம் 12+890 வரையான நிர்மானத்தினை அமுல்படுத்த 2021 நவம்பர் 24 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மான இல 21/1988/319/024-III/டிபீஆர் இன் கீழ் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 17 ஒப்பந்த பொதிகளுடனான மொத்தத்தில் 15 ஒப்பந்தபொதிகள் கையளிக்கப்பட்டிருந்தன. அதன்படி இச்செயற்திட்டம் முறையான நிதியியல் மற்றும் நிர்மான | இவ் நீண்ட தாமத்தினை கருத்தில் கொண்டு இதனை மேலும் தாமதப்படுத்தாதிருக்க வேண்டியிருந்ததால் வீதி அபிவிருத்தி அதிகார சபை அதுவாகவே அமைச்சரவை அமைச்சர்களின் அனுமதியுடன் 2021 இல் முதல் 12 கி.மீ பிரிவுகளின் நிர்மான வேலையை ஆரம்பித்தது. | நிர்மானத்தினை துரிதப்படுத்த அனைத்து படிமுறைகளும் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திட்டமில்லாது 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை இல 01/2019 இன் பிரகாரம் செயற்திட்டத்தினை அமுல்படுத்தும் நேரத்தில் நிதிகளினை பெற்றுக்கொள்ள கடன்தாரர்கள் தொடர்பாக ஓர் உடன்படிக்கை அல்லது உத்தரவாதம் காணப்படல் வேண்டும். இருப்பினும் அச்செயன்முறை மத்திய அதிவேகப்பாதையின் பிரிவு III இல் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுபேறாக செயற்திட்டமானது சுமார் 7 வருடங்களாக ஓர் கடன்தாரர் இல்லாமல் இன்னும் அமுல்படுத்துகின்றது. இந்நிலமை விலை உயர்வுகள் மற்றும் மேலதிக மேந்தலைகள் காரணமாக செயற்திட்டத்தின் கிரயத்தில் பாரிய அதிகரிப்பிற்கு வழிவகுக்கும். | மத்திய அதிவேகப்பாதை செயற்திட்டம் - பிரிவு 03 2016 இல் ஜப்பான் கடன் உதவியின் கீழ் நிர்மானிக்க திட்டமிடப்பட்டிருந்ததுடன் ஜப்பானிய டோக்கியோ மிட்சுபிசி வங்கி கடன் உதவியின் ஏற்பாடுகள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடன் ஓர் உடன்படிக்கையை ஈடுபட்டிருந்தது. ஆனால் அதனடுத்த சமரச பேரம்பேசல்களில் அரசாங்கம் அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளமுடியாத சில நிபந்தனைகள் காரணமாக கடன் உடன்படிக்கை மீது ஓர் இறுதி முடிவினை எட்டமுடியாமல் இருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டியதுடன் ஒவ்வொரு படிமுறையும் நிர்மானத்தினை துரிதப்படுத்த எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | அடிப்படைதிட்டத்தின் பிரகாரம் பிரிவு 38 (அ) இன் கீழ் முதல் வர்த்தமானி அறிவிப்பு 2016 பெப்ரவரி 5 இல் பிரசுரிக்கப்பட்டிருந்தும் காணி சுவீகரிப்பு திட்டம் 2016 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் திருத்தப்பட்டிருந்தது. இருப்பினும் செயற்திட்டமானது திருத்தப்பட்ட இலக்குகளை கூட அடையதவறியிருந்தது. | திருத்தப்பட்ட இலக்குகள் பின்வரும் காரணங்களினால் முறையாக நிறைவேற்றமுடியாமலிருந்தது.<br>• அரசியல் மாற்றங்களினால் செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதா அல்லது திட்டங்களை மாற்றியமைப்பதா என தீர்மானிக்க நீண்ட நேரம் கடந்திருந்தது.<br>• அரசியல் மாற்றங்கள் காரணமாக அமைச்சர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் மாற்றம்.<br>• காணிசுவீகரிப்பு செயன்முறை பல்வேறு அரசநிறுவனங்களினால் செய்யப்பட்டிருந்ததனால் முன்னுரிமை தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் செயற்திட்டங்களிற்கு வழங்கப்பட்டிருந்தது.<br>• திட்டமிட்ட படி நிதி ஒதுக்கங்கள் | காணி சுவீகரிப்பு செயன்முறையை விரைவாக பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கிடைக்கப்பெறாமை.<br>• கொரோனா பரவல் நிலைமை. | |
| (ஈ) | ரூபா 30 மில்லியன் தொகையான ஊக்குவிப்புக்கள் 26 வாரங்களிற்குள் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தி பூர்த்திசெய்வதற்காக அமைச்சு, நிலஅளவைதிணைக்களம், மதிப்பீட்டுதிணைக்களம் மற்றும் பிரதேச செயலகங்கள் என்பவற்றின் உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் 181 காணித்துண்டுகளின் உரிமை மாத்திரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றப்பட்டிருந்தது. | தற்போதைய நோய் பரவல் நிலைமை காரணமாக மாற்றீட்டில் ஓர் தாமதம் காணப்பட்டிருந்தும் பிரதேச செயலகங்கள் அனைத்து மீதமான துண்டுகளிற்காகவும் பிரிவு 44 இன் கீழ் மாற்றல் செயன்முறையை துரிதப்படுத்த எழுத்துமூலம் அறிவித்துள்ளது. | காணி சுவீகரிப்பு செயன்முறையை விரைவாக பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2.9 மத்திய அதிவேகப்பாதை செயற்திட்டம் - பகுதி 04

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2016 திசெம்பர் 14 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மான இல சீபி/16/2536/713/048-1/டிபீஆர் இன் கீழ் சீனாவிலுள்ள கசோபா நிறுவனத்திற்கு நிர்மான ஒப்பந்தத்தினை வழங்க அனுமதிக்கப்பட்டிருந்தும் அது 2020 மார்ச் 5 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மான இல சீபி/20/043/221/013 இனால் இரத்துச்செய்யப்பட்டிருந்தது. பிறகு ரவுட்டோன் சர்வதேச கம்பனிக்கு நிர்மான ஒப்பந்தத்தினை கையளிக்க 2021 பெப்ரவரி 22 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மான இல சிபீ/21/0268/319/008 இனால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும் அது கூட 2022 பெப்ரவரி 02 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மான இல 22/0158/319/002-I இனால் நிதிகளின் குறைபாடு காரணமாக ரத்துசெய்யப்பட்டிருந்தது. பின்னர் திட்டமிடல், நிர்மானம் மற்றும் நிதிகளின் அடிப்படையில் முதல் 30 கி.மீகளின் நிர்மானத்திற்காக எவிசெக்(ABIC-CHEC) கூட்டுமயற்சியிடமிருந்து தொழிநுட்பம் மற்றும் நிதி மும்மொழிவுகளை | 2016 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிற்கான பெறுகை செயன்முறை ஒப்பந்தம் கையயளிக்கப்படும் வரை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. அப்பெறுகை செயன்முறையில் நிதிகள் காணப்படாததன் காரணமாக உரிய நிறுவனங்களுடன் நிதி உடன்படிக்கைகளை முடிவாக்குவது ஒப்பந்த கையளிப்பிற்காக ஓர் பாரிய பிரச்சனையாக இருந்தது. பிரதான திட்டத்தின் பிரகாரம் உண்மையான காணி சுவீகரிப்பு செயன்முறை இழப்பீட்டு செயன்முறை பூர்த்தியாகும் வரை தொடரும். | நிர்மானங்களை துரிதப்படுத்த அனைத்து படிமுறைகளும் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அழைக்கவும் உள்நாட்டு நிதிகள் மூலம் பிரிவு 30+000 தொடக்கம் 40+300 வரையான வரை நிர்மானிக்க உள்நாட்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து தொழிநுட்ப மற்றும் நிதி மும்மொழிவுகளை அழைக்கவும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மேலும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கலந்துரையாடல் குழு சிவில் வேலை பெறுகை மற்றும் தொழிநுட்ப மும்மொழிவு மதிப்பீட்டிற்காகவும் பிரிவு 0+300 தொடக்கம் 30+000 வரை நிர்மானிப்பதுடன் தொடர்புபட்ட பரிந்துரைகளை சமர்ப்பிக்கவும் நியமிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் நிர்மான ஒப்பந்தம் 2022 பெப்ரவரி 28 வரை கையளிக்கப்பட்டிராததுடன் செயற்திட்டமானது ஓர் முறையான நிதி மற்றும் நிர்மான திட்டமில்லாமல் ஆரம்பித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை இல 01/2019 இன் பிரகாரம் செயற்திட்டத்தினை அமுல்படுத்தும் நேரத்தில் நிதிகளினை பெற்றுக்கொள்ள கடன்தாரர்கள் தொடர்பாக ஓர் உடன்படிக்கை அல்லது உத்தரவாதம் காணப்படல் வேண்டும். இருப்பினும் அச்செயன்முறை மத்திய அதிவேகப்பாதையின் பிரிவு IV இல் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுபேறாக செயற்திட்டமானது சுமார் 5 வருடங்களாக ஓர் கடன்தாரர் இல்லாமல் இன்னும் அமுல்படுத்துகின்றது. இந்நிலமை விலை உயர்வுகள் மற்றும் மேலதிக மேந்தலைகள் காரணமாக செயற்திட்டத்தின் கிரயத்தில் பாரிய அதிகரிப்பிற்கு வழிவகுக்கும். | உடன்பட்டனர். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் நிர்மானங்களை துரிதப்படுத்த அனைத்து படிமுறைகளும் எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | அடிப்படை திட்டத்தின் பிரகாரம் பிரிவு 38 (அ) இன் கீழ் முதல் வர்த்தமானி அறிவிப்பு 2016 நவம்பர் 03 இல் பிரசுரிக்கப்பட்டிருந்தும் காணி சுவீகரிப்பு திட்டம் 2017 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் திருத்தப்பட்டிருந்தது. இருப்பினும் செயற்திட்டமானது திருத்தப்பட்ட இலக்குகளை கூட அடையதவறியிருந்தது. அதன்படி காணி சுவீகரிப்பு செயன்முறை | காணிசுவீகரிப்பு செயன்முறை அடிப்படையாக திட்டமிடப்பட்டிருந்தும் அது ஒரு பல்நிறுவன பணியாகும். மேலும் இதனால் எந்தவொரு நிறுவனத்திலாவது ஏதாவது தாமதம் இருந்தால் அது ஒட்டுமொத்த செயன்முறையையும் பாதிக்கும் உயிர்தஞாயிறு தாக்குதல், கோவிட் 19 நோய்ப்பரவல், பல்வேறு | காணி சுவீகரிப்பு செயன்முறையை விரைவாக பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்ட ஆரம்பத்திலிருந்து முறையாக திட்டமிடப்பட்டிருக்கவில்லை. | நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் பொது மக்கள் ஆர்ப்பாட்டங்கள் என்பன தாமதத்தினை ஏற்படுத்தியிருந்தது. காணி சுவீகரிப்பு செயன்முறை தற்போதைய நிலைமையினை பேண பல்வேறு தடவைகள் மாற்றியமைக்கப்பட்டிருந்தது. | |
| (ஈ) | 3512 காணித்துண்டுகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரிவு 38(அ) வர்த்தமானி அறிவிப்பின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் செயற்திட்டமானது மீளாய்வாண்டின் இறுதிவரை கூட காணி சுவீகரிப்பு சட்டத்தின் உபபிரிவு 44 இன் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் எவ்வித காணித்துண்டுகளையும் பதிவு செய்ய தவரியிருந்தது. | உடன்பட்டனர். | மேற்கூறியபடி |
| (உ) | கலேவெல மற்றும் தம்புள்ளவிலுள்ள அனேகமான காணிகள் மதஸ்தலங்கள், சந்நிதிகள் அல்லது படையெடுத்து உரிமையாக்கிய மக்களினால் உரிமை கொள்ளப்பட்டிருந்தது. இருப்பினும் 2014 மே 30 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி இல 1864/54 இடமிருந்து வேறாக அக்காணிகளின் உரிமையாளர்கள் மேலதிக நிவாரணங்களை வேண்டியிருந்ததுடன் அவர்களை எவ்வாறு ஒருங்கிணைப்பது என்பது தொடர்பான தீர்மானம் 2021 திசெம்பர் வரை செய்யப்பட்டிருக்கவில்லை. | மேலதிக கலந்துரையாடல்கள் தீர்க்கப்படாத பிரச்சினைகளை தீர்க்க உரிய தரப்பினர்களுடன் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. | மேற்கூறியபடி. |
| (ஊ) | ரூபா 6.02 மில்லியன் தொகையான ஊக்குவிப்புக்கள் 26 வாரங்களிற்குள் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தி பூர்த்திசெய்வதற்காக அமைச்சு, நிலஅளவைதிணைக்களம், மதிப்பீட்டுதிணைக்களம் மற்றும் பிரதேச செயலகங்கள் என்பவற்றின் உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் 3,512 காணித்துண்டுகளில் 2,645 காணித்துண்டுகளிற்காக பிரிவு 9 (1) இன் கீழ் விசாரனை செய்யப்பட்டிருந்ததுடன் 2018 காணித்துண்டுகளிற்காக பிரிவு 10 (1) இன் கீழ் அறிவிப்புக்களும் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி காணிசுவீகரிப்பு செயன்முறை இன்னும் | அனேகமான காணி சுவீகரிப்பு வேலை கோவிட் 19 நோய்ப்பரவல் நிலைமை காரணமாக வரையறுக்கப்பட்ட உத்தியோகத்தர்களுடன் பிரதேச செயலகங்களினூடாக செய்யப்பட்டிருந்தது. | மேற்கூறியபடி. |

மந்தமாக உள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (எ) | செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் செயற்திட்டத்தின் சிவில் வேலைகள் முன்னுரிமை செயற்திட்டங்களின் மந்தகதியான திட்டமிடல் காரணமாக 2022 பெப்ரவரி 28 முடிவில் கூட ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும் கூட்டுமொத்தம் ரூபா 448.87 மில்லியன் 2021 திசெம்பர் 31 வரை செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் மீது ஏற்பட்டிருந்தது. | அரச கொள்கை திட்டத்தின் பிரகாரம் இச்செயற்திட்டமானது ஓர் பாரிய செயற்திட்டமாக அடையாளப்படுத்தப்பட்டிருந்ததுடன் அது ஓர் முன்னுரிமை செயற்திட்டமாக 2016 இல் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் ஆதரவாளர் 2016 மற்றும் 2020 பெறுகை செயன்முறைக்காக ஓர் நிதி பொறிமுறையை நிறுவியிருக்கவில்லை எனவே ஓர் புதிய பெறுகை செயன்முறை 2022 இற்காக செய்யப்படுகின்றது. | நிர்மானத்தை துரிதப்படுத்த அனைத்து படிமுறைகளும் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஏ) | செயற்திட்டமானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்களை மிஞ்சி இரண்டு முகாமைத்துவ உதவியாளர்களை ஆட்சேர்த்து இருந்ததுடன் 2021 திசெம்பர் 31 வரை சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளாக கூட்டுமொத்தம் ரூபா 5,448,093 இனை செலுத்தியிருந்தது. | முகாமைத்துவ வேலைகள் திணைக்களத்தின் அனுமதியின் பிரகாரம் இவ்விரு முகாமைத்துவ உதவியாளர்களின் தொழில்சார் தகமைகள் மற்றும் கல்வித்தகமைகள் என்பன மதிப்பிடப்படுவதுடன் உடன்படிக்கைகள் உத்தியோகத்தர்களின் மிகதகுந்தநிலையில் நியமிக்க அவர்களிற்காக செய்யப்பட்டிருந்தது. | சேவை தேவைப்பாடுகள் அனுமதிக்கப்பட்ட ஆளணியிலிருந்து மாத்திரம் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2.10 களனி ஆற்றின் மேலான புதிய பாலம் நிர்மானித்தல் செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டிற்காக செலவினங்களிற்காக உள்நாட்டு நிதிகலிலிருந்தும் செலவினங்களிற்காக செயற்திட்டத்தின் வெளிநாட்டு நிதிகளிலிருந்தும் ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 15,460 மில்லியன் தொகையாக இருந்ததுடன் அத்தொகையிலிருந்து செய்யப்பட்ட செலவு ரூபா 10,195 மில்லியனாக இருந்தது. அதன்படி ஒதுக்கப்பட்ட பணத்தில் 34 சதவீதமான ரூபா 5,265 மில்லியன் பயன்படுத்தப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | கோவிட் 19 நோய்ப்பரவல் காரணமாக ஒப்பந்தபொதி 1 மற்றும் 2 என்பனவற்றின் ஒப்பந்தகாலப்பகுதி நீடிக்கப்பட வேண்டும். மேலும் இதனால் இப்பணம் பயன்படுத்தப்படாமல் போகக்கூடும். | திட்டங்கள் உச்சஅளவில் ஆண்டிற்காக பயன்படுத்தக்கூடியவகையில் ஒதுக்கீடுகள் ஓர் முறையில் தயாரிக்கப்படல் வேண்டும். அரச பாதீடு மீதான அழுத்தத்தினை குறைக்க அல்லது ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை பயன்படுத்த மிகவும் அலட்டிக்கொள்ளாமல் மதிப்பீடுகளை தயாரிக்க கவனம்செலுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செயற்திட்டத்தின் ஒப்பந்தபொதி 02 உடன் தொடர்புபட்டு 2021 நவம்பர் 01 தொடக்கம் நவம்பர் 30 வரை செய்யப்பட்ட வேலைக்காக ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால கொடுப்பனவு பத்திரம் இல.50 இற்காக செலுத்தவேண்டிய தொகை ரூபா 97.8 மில்லியனாக இருந்தது, மேலும் செயற்திட்டத்தினால் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா 135 மில்லியனாக இருந்தது. எனவே கூறப்பட்ட பட்டியலிற்காக செய்யப்பட்ட மேலதிக ஒதுக்கீடு ரூபா 37.23 மில்லியனாகவிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்குகளில் அது திருத்தப்பட்டிருக்கவில்லை. | 2021.12.31 வரை பூர்த்திசெய்யப்பட்ட வேலைகளிற்காக ஒப்பந்ததாரர்களினால் வழங்கப்பட்ட பட்டியல்கள் கணக்கீட்டு ஆண்டின் இறுதியில் கிடைக்கப்பெறாததனால் மதிப்பீடுகள் நிலுவை தொகைகளை கணக்கிட ஒப்பந்ததாரர்களிடமிருந்து பெறப்பட்டிருந்தது. இடைக்கால கொடுப்பனவு பத்திரம் இல 50 கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் கொடுப்பனவிற்காக எங்களுக்கு அனுப்பப்பட்டதனால் மீளாய்வாண்டின் போது அத்தொகையினை திருத்தமுடியாமலிருந்தது. | உரிய நேரத்தில் பட்டியல்களை கொண்டுவரவும் அதே ஆண்டிற்குள் அக்கொடுக்கல் வாங்கல்களை கணக்கிடவும் படிமுறைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2.11 போக்குவரத்து செயற்திட்ட தயார்படுத்தல் வசதி

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | எந்த நிறுவனங்களினதும் நிதிக்கூற்றுக்களை வழங்குவதற்காக அனுமதிக்கப்பட்ட திகதி மிகமுக்கியமானதுடன் ஓர் கட்டாய தேவைப்பாடும் ஆகும். இருப்பினும் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓர் திகதி இல்லாமல் கையொப்பமிடப்பட்டு போக்குவரத்து செயற்திட்ட தயார்படுத்தல்வசதி செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களை அனுமதித்திருந்தனர். | அனுமதிக்கான திகதி விடுபட்டமை நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | அனுமதிக்கப்பட்ட திகதி நிதிக்கூற்றுக்களில் முறையாக குறிப்பிடப்படல் வேண்டும். |
| (ஆ) | நெடுஞ்சாலைகள் அமைச்சு இச்செயற்திட்டத்தின் கீழ் அமுல்படுத்த உண்மையாக திட்டமிடப்பட்ட அதிவேகப்பாதை அபிவிருத்தி செயற்திட்டத்தின் கருத்துரு கற்கை, முன்சாத்தியவள கற்கை, ஆரம்பகட்ட மற்றும் விபரமான பொறியியல் வடிவமைப்புக்கள் என்பனவற்றிற்கான செயற்திட்ட மும்மொழிவிற்காக திறைசேறியிடமிருந்து அனுமதியை வேண்டுகோள்விடுத்திருந்தும் திறைசேறியானது இச்செயற்திட்டத்திற்கான | செயற்திட்ட நடவடிக்கைகள் இன்னும் இடம்பெற்றுக்கொண்டிருப்பதனால் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல 01 இல் கூறப்பட்ட பிரகாரம் செயற்திட்டத்தின் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவினை பராமரிப்பதில் எவ்வித சிக்கல்களும் இல்லை. | செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதி வரை செயற்திட்டம் நிலைத்திருப்பதுடன் தொடர்புபட்டு எழுகின்ற விடையங்கள் பயன்பாட்டாளர்களிற்கு வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஐந்தொகை திகதி ஆரம்பிக்கப்பட்டதில் உள்ளவாறு அனுமதியினை வழங்க நிராகரித்திருந்ததுடன் அதனது பெறுபேறு ஓர் முன்னுரிமையாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன்படி செயற்திட்டத்தின் சரியான நிபந்தனை மற்றும் அதன் தொடர்ந்து செல்லும் தன்மை மீதான பாதிப்பு என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல 01 இன் பிரகாரம் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் வழங்கப்பட்ட திகதியில் உள்ளவாறு வெளிப்படுத்தியிருக்கவில்லை. | | |
| (இ) | தெற்காசிய உபபிராந்திய பொருளாதார கூட்டுத்தாபனத்தின் கீழ் நிர்மானிக்கப்படுகின்ற துறைமுக நுழைவினை மேம்படுத்தும் நெடுஞ்சாலை செயற்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 361.53 மில்லியன் பெறுமதிகொண்ட மூன்று ஆலோசனை நடவடிக்கைகள் செயற்திட்டத்தின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. அச்செயற்திட்டங்களின் பெறுமதி இன்னும் நடைமுறை வேலைக்கணக்கில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | உடன்பட்டனர். | ஆலோசனை சேவைகளின் பெறுமதி மூலதனமாக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | வீதிகள், புகையிரதப்பாதைகள் மற்றும் துறைமுகங்கள் போன்ற மூன்று உபகூறுகளிற்காக பெறப்பட்ட கடன்களிலிருந்தான வீதி கூறுகளிற்கு மூலதனமாக்கப்பட வேண்டிய தொகையினை அடையாளப்படுத்த ஓர் முறையான முறைமை நிறுவப்பட்டிருக்கவில்லை. எனவே 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன்தொகை ரூபா 422.65 மில்லியன் மற்றும் வட்டி 6.47 மில்லியன் என்பனவற்றின் உண்மைத்தன்மையினை சரிபார்க்க கணக்காய்வினால் முடியாமல் இருந்தது. | உடன்பட்டனர். | செயற்திட்டத்தின் கடன்தொகையிலிருந்து மூலதனமாக்கப்பட வேண்டிய தொகையினை அடையாளங்கான ஓர் முறையான முறைமை நிறுவப்படல் வேண்டும். |

### 3.2.12 25 பாலங்களின் புனரமைப்பு செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| இச் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் கீழ் அமுல்படுத்தப்படும் பிரதான பாலங்கள் | உடன்பட்டனர். தேவையான அளவீடுகள் எதிர்காலத்தில் | கொடுப்பனவுகள் செலவுவிடையங்களை |

| | | |
|---|---|---|
| நிர்மான செயற்திட்டத்திற்கான இழப்பீட்டு கொடுப்பனவுகளிற்காக கூட்டுமொத்தம் ரூபா 10.01 மில்லியன் 2018 ஆம் ஆண்டில் 25 பாலங்களின் புனரமைப்பு செயற்திட்டத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் இக்கொடுப்பனவு உரிய செயற்திட்டத்திடமிருந்து இன்னும் திரும்பப்பெறப்பட்டிருக்காததுடன் இக்கொடுப்பனவிற்கான ஓர் அனுமதி செயற்திட்டத்தினால் இன்னும் பெறப்பட்டிருக்கவில்லை. | அவ்வாறான விடுபாடுகளை தவிர்க்க எடுக்கப்படும். | மாற்றல்களிற்கான முறையான அனுமதி பெறப்பட்டதன் பின்னர் செய்யப்படல் வேண்டும். |

**3.2.13 மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள வீதிகள் மற்றும் பாலங்களின் விரிவாக்கல் மற்றும் முன்னேற்ற செயற்திட்டம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான வெளிநாட்டு கடன் ஒதுக்கீடுகளில் 20 சதவீதத்திற்கு சமமான கூட்டுமொத்தம் ரூபா 1,711.18 மில்லியன் செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. இருப்பினும் இன்னுமொரு ரூபா 600 மில்லியன் ரூபாய்கள் செயற்திட்டத்தினால் கணக்கிடப்பட்டிருந்தது. ஆனால் அத்தொகை உரிய வருடத்திற்காக செயற்திட்ட செயன்முறைகள் திணைக்களத்தினால் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டமானது ஒப்பந்தகிரயமாக கூட்டுமொத்தம் ரூபா 7,389.57 மில்லியன் செலவிட்டிருந்தும் உரிய வருடத்திற்காக திறைசேறி செயற்பாடுகள் திணைக்களத்தினால் கணக்கிடப்பட்ட செலவினங்கள் ரூபா 6,788.82 மில்லியனாக இருந்தது. எனவே செயற்திட்டமானது ஒதுக்கங்கள் பயன்படுத்தப்பட்டதாக ரூபா 6,788.82 மில்லியனை மாத்திரமே கணக்கிடமுடியுமாகவிருந்தது. எனவே ரூபா 1,711.18 மில்லியன் ஒதுக்கங்கள் பயன்படுத்தப்படாததாக காட்டப்பட்டுள்ளது. | ஆண்டுடன் தொடர்புபட்ட ஏற்பாடுகள் வருடத்திற்குள் பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | 2019 மார்ச் 15 ஆம் திகதிய முகாமைத்துவ சுற்றறிக்கை இல 01/2019 இன் உபபிரிவு 9.3 இன் பிரகாரம் வரிசையமைச்சின் செயலாளர் செயற்திட்ட திசைமாற்றல் குழு ஒவ்வொரு இரு மாதங்களிற்கு ஒரு தடவையாவது சந்திக்கின்றார்களா என்பதனை உறுதிப்படுத்த வேண்டும். இருப்பினும் மீளாய்வாண்டின் போது எவ்வித செயற்திட்ட திசைமாற்றல் குழு கூட்டங்களோ நடாத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | நாட்டில் கோவிட் 19 பரவலினை கட்டுப்படுத்த விதிமுறைகள் காணப்பட்டதன் காரணமாக செயற்திட்ட திசைமாற்றல் குழவினை திரட்ட முடியாமல் இருந்தது. | செயற்திட்ட திசைமாற்றல் குழு சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடாத்தப்படல் வேண்டும். |

### 3.2.14 கொகுவல மற்றும் கதம்பே மேன்பாலங்களின் வடிவமைப்பு மற்றும் நிர்மான செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் மாதாந்த செலவின அறிக்கையின் பிரகாரம் வெளிநாட்டு கடன் ஒதுக்கீட்டின் 35 சதவீதத்திற்கு சமமான ரூபா 1,528 மில்லியன் மற்றும் அரசநிதிகளிலிருந்தான ஒதுக்கீடுகளில் 57 சதவீதத்திற்கு சமமான 40.62 மில்லியன் என்பன 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்படாமல் இருந்தது. | உடன்பட்டனர். | ஏற்பாடுகள் வருடத்திற்குள் பயன்படுத்தப்படல் வேண்டும். அல்லது மதிப்பீடுகள் மாற்றியமைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவின கூற்றின் பிரகாரம் மொத்த கடன் ஒதுக்கங்கள் ரூபா 4,670 மில்லியன் தொகையாக இருந்தது மேலும் அதில் ரூபா 2,637 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கை ரூபா 4,270 மில்லியனில் கூட்டுமொத்தம் ரூபா 2,637 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் இலக்குகள் அடையப்பட்டிருந்தமையையும் காட்டுகின்றது. அதன்படி ஆண்டிற்காக எதிர்பார்க்கப்பட்ட பௌதீக இலக்கு மற்றும் நிதிஒதுக்கீடுகள் என்பன ஒவ்வொன்றுடனும் இணக்கமானதாக இராமை அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தின் உத்தியோகபூர்வ ஆரம்பிப்பு 2021 ஆகஸ்ட் 16 இல் எடுத்திருந்ததுடன் இந்நோக்கத்திற்கான நிதி ஒதுக்கீடு 2019 ஆம் ஆண்டில் எங்களால் அறிவிக்கப்பட்ட நிதித்தேவைப்பாடுகளின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. எனவே அனைத்து செலவினங்களும் விரைவான செயற்திட்ட செயலாற்றல் ஊடாக பெறப்பட்டிருந்தமை அறிவிக்கப்பட்டிருந்ததுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபை இலங்கை அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் தலையிடமுடியாது.<br>(i) 2019 இற்கான பாதீட்டு ஒதுக்கங்களிற்கு வேண்டுகோள்கள் விடுத்தல்.<br>(ii) அமைச்சரவை அனுமதி பெறப்பட்டதன் பின்னர் புதிய கடன் உடன்படிக்கையில் ஈடுபடல். | ஒப்பிடக்கூடிய உண்மைகள் தகவல்களை சமர்ப்பிக்கும் போது முறையாக காட்டப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | (iii) அவ்உடன்படிக்கையின் பிரகாரம் வேலைகளை ஆரம்பிப்பது கூட வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் சட்டரீதியாக செய்யப்பட்டிருந்தது. | |
| (இ) | உரிய உத்தியோகத்தர்கள் ரூபா 6,082 மில்லியன் தொகையான 14 நாட்குறிப்பு பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு பரிட்சிக்கப்பட்டதாக கையொப்பமிட்டிருக்காததுடன் கணக்காளர் கூட உறுதிப்படுத்தலிற்காக கையொப்பமிட்டிருக்கவில்லை. இது ஓர் தீவிர கட்டுபாட்டு பலவீனங்களாக அவதானிக்கப்பட்டிருந்தது இருப்பினும் 15 நாட்குறிப்பு பட்டியல்கள் மாத்திரமே நிதி மீளாய்வாண்டின் போது தயாரிக்கப்பட்டிருந்தது. | 22021 ஆம் ஆண்டில் கோவிட் 19 நிலமை காரணமாக கடமைகள் ஆன்லைன் முறைமை ஊடாக செய்யவேண்டியிருந்தது. எனவே நாட்குறிப்பு பதிவுகளை கொண்ட கோவை அவ்வாறான விடுபாடுகள் காரணமாக அத்தாட்சிப்படுத்த முடியாமல் இருந்தது. இருப்பினும் அவ் ஆவணங்களிலுள்ள அப்பெறுமதிகளின் உண்மைத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் இவ்வாறான விடுபாடுகளை தவிர்க்க தேவையான அளவீடுகள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | நாட்குறிப்பு பட்டியல்கள் தொடர்புபட்ட பொறுப்புடைய உத்தியோகத்தர்களால் பரீட்சித்து அத்தாட்சிப்படுத்தி அனுமதிக்கப்பட வேண்டியதுடன் தொழில்சார் பாதுகாப்புடன் செயற்படல் வேண்டும். |

### 3.2.15 தென்பகுதி வீதி இணைப்பு செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் மாற்றியமைக்கப்பட்ட வேலைப்பரப்பின் பிரகாரம் 5 பொதிகளின் கீழ் கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டங்களில் தேசிய வீதி வலையமைப்பிலான வீதி புனரமைப்பு நடவடிக்கைகளின் 40.2 கி.மீகளை அமுல்படுத்த திட்டமிட்டிருந்தது இருப்பினும் பொதிகள் 1,2 மற்றும் 4 இன் நிர்மான வேலைகள் முறையே 248,534 மற்றும் 689 நாட்கள் தாமதத்தின் பின்னர் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. பொதி 5 இன் புனரமைப்பு வேலை 2020 பெப்ரவரி 29 இல் | காணி சுவீகரிப்புகளிற்கான இழப்பீட்டு கொடுப்பனவுகளில் தாமதம், குறித்த காலப்பகுதிக்குள் தொலைபேசி, மின்சாரம் மற்றும் நீர்குழாய்கள் போன்ற பொதுப்பயன்பாடுகளை செய்ய முடியாதிருந்தமை மற்றும் ஒப்பந்தபொதிகளில் செய்யப்படவேண்டிய வேலைகளில் சில மாற்றங்கள் போன்றன காரணங்களாகவிருந்தன. | பட்டியலிடப்பட்ட திகதிகளிற்குள் வீதி புனரமைப்பு வேலைகளை பூர்த்திசெய்ய படிமுறைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அது 2021 நவம்பர் 30 அளவில் பூர்த்திசெய்ய திட்டமிடப்பட்டிருந்தும் ஆரம்ப வேலைத்திட்டத்தின் பிரகாரம் பௌதீக செயலாற்றல் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 59 சதவீதமாக மாத்திரம் இருந்தது. இருப்பினும் 2017 ஜுன் 19 இல் ஒப்பந்தபொதி 01 இன் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட 15 இடைக்கால கொடுப்பனவு பட்டியல்களின் ஊடாக மீளப்பெறப்பட்டிருந்ததாமத கட்டணங்கள் ரூபா 31.95 மில்லியன் தொகை 2019 ஒக்டோபர் 10 இல் ஒப்பந்ததாரரினால் விடுவிக்கப்பட்டிருந்தது. மேலும் ஒப்பந்தபொதிகள் 04 இன் கீழ் மீளப்பெறப்பட்ட தாமத கட்டணங்கள் ரூபா 14.18 மில்லியன் எதிர்கால மீள் கொடுப்பனவு இலக்குடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் ஒரு பொறுப்பாக அறிக்கையிடப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | அரசாங்கத்திற்கு சொந்தமான 1,562 காணித்துன்டுகள் உள்ளடங்களாக 8,499 காணித்துன்டுகளை கொள்வனவு செய்ய செயற்திட்டத்தினால் திட்டமிடப்பட்டிருந்ததுடன் ரூபா 8,418 மில்லியன் தொகையான இழப்பீடு காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், காணி சுவிகரிப்பு மற்றும் மீள வழங்கள் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் மேலும் ரூபா 3,210 மில்லியன் தொகையான மேலதிக கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் இழப்பீடுகளை கொடுத்து தீர்ப்பதில் தாமதம் காரணமாக ரூபா 649 மில்லியன் தொகையான இழப்பீட்டு வட்டி 2021 திசெம்பர் 31 உள்ளவாறு செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், எவ்வித காணித்துண்டுகளும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பேரில் 2021 திசெம்பர் 31 உள்ளவாறு கூட காணி சுவிகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவுகள் வட்டி கொடுப்பனவுகளிற்கு முன்னர் மிகுதி துண்டுகளிற்காக செய்யப்படுகின்ற இழப்பீட்டு கொடுப்பனவுகள் மற்றும் காணி சுவீகரிப்புகளிற்கு செலுத்துவதற்கு மாற்றியமைக்கப்பட்ட பணத்தொகையின் பிரகாரம் செய்யப்பட்டிருந்தது. இழப்பீடுகளிற்கான கொடுப்பனவு வட்டி செலுத்துவதற்கு முன்னர் பூர்த்திசெய்யப்படவேண்டியது டன் வட்டி கொடுப்பனவுகள் 2021 ஆம் ஆண்டு முடிவில் கிடைக்கப்பெற்ற பணத்திலிருந்து ஓர் குறித்த அளவு செய்யப்பட்டிருந்தது. காணிசுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் அக்காணித்துண்டுகளிற்கான பதிவுசெய்தல் வேலை பிரதேசசெயலக மட்டத்தில் செய்யப்படுகின்றது. | காணிகளிற்கான இழப்பீட்டு தொகை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெயரில் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்தல் என்பன துரிதப்படுத்தப்படல் வேண்டும். |

### 3.2.16 போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து மேலாண்மை செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2017 செப்டம்பர் 29 இல் ஐ.அ.டொலர் 125 மில்லியன் தொகையான ஓர் கடன் வழங்க உலக வங்கியினால் உடன்படப்பட்டிருந்தும் செயற்திட்டத்தின் வேலைப்பரப்பில் மீள்கட்டமைப்பு காரணமாக கடன் தொகை 2018 ஆகஸ்ட் 15 இல் ஐ.அ.டொலர் 16 மில்லியன் வரை மாற்றியமைக்கப்பட்டிருந்தது. மேலும் 2020 மே 06 இல் ஐ.அ.டொலர் 9 மில்லியன் வரையும் மாற்றியமைக்கப்பட்டிருந்தது அது ரூபா 1,305 மில்லியனாகும். இருப்பினும் ஐ.அ.டொலர் 1.41 மில்லியன் அல்லது மாற்றியமைக்கப்பட்ட கடன் வசதி ஐ.அ.டொலர் 9 மில்லியனில் 16 சதவீதம் மாத்திரமே 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது அது 4 வருடங்களும் 3 மாதங்களுமான காலப்பகுதி முடிவிலாகும். | 2020 இல் கடன் உடன்படிக்கை மாற்றியமைக்கப்பட்டமை மற்றும் கோவிட் பரவல் போன்றன காரணமாக செயற்திட்டத்தின் விசேட உத்தியோகத்தர்களிற்கான முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி 2020 ஜூன் வரை தாமதித்திருந்தது. மேலும் இறக்குமதி கட்டுப்பாடுகள் மீது அரசாங்க கொள்கைகள் காரணமாக செயற்திட்டத்திற்கு தேவையான உபகரணம் மற்றும் வாகனங்களின் இறக்குமதி 2021 முடிவு வரை தாமதமடைந்திருந்தது. | கடன் உடன்படிக்கை 2023 மார்ச் 31 இல் காலாவதியாக பட்டியலிடப்பட்டிருந்ததால் செயற்திட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்த அளவீடுகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டம் மற்றும் காலநிலை பின்னடைவு முன்னேற்ற செயற்திட்டம் என்பன இரண்டும் ஒரே கட்டிடத்தில் செயற்படுவதுடன் வருடாந்த கட்டட வாடகை ரூபா 5.68 மில்லியன் 2020 திசெம்பர் 31 வரை 2 செயற்திட்டங்களிற்கு இடையேயும் சமமாக பகிரப்பட்டிருந்தது. இருப்பினும் 2021 ஆம் ஆண்டிற்கான மொத்த கட்டட வாடகை ரூபா 5.68 மில்லியன் போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டத்தினால் மாத்திரமே செலுத்தப்பட்டிருந்தது. காலநிலை பின்னடைவு முன்னேற்ற செயற்திட்டமானது 2021 ஜூன் 30 வரை இக்கட்டிடத்தில் இயங்கியிருந்தும் அந்நேரம் வரையான கட்டிட வாடகை இரு செயற்திட்டங்களிற்கிடையேயும் பகிரப்பட்டிருக்கவில்லை. மேலும் | களப்பரீட்சிப்பிலிருந்து உத்தியோகபூர்வ வாடகை கிரயங்கள் காலநிலை பின்னடைவு முன்னேற்ற செயற்திட்டம் (சீஆர்ஐபி) மற்றும் போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டம் (டிசீஏஎம்பி) என்பனவற்றிற்கிடையே பகிரப்பட்டுள்ளது. 2021 ஏப்ரலில் செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கல் காரணமாக காலநிலை பின்னடைவு முன்னேற்ற செயற்திட்டம் (சீஆர்ஐபி) 20021 சனவரி இலிருந்து போதியளவு நிதிகளினை பெற்றிருக்கவில்லை. அவ்வாறான சூழ்நிலைகளில் சில அடிப்படை செலவினங்கள் போக்குவரத்து இணைப்பு | தேவையற்ற வாடகை கொடுப்பனவுகளை தவிர்க்க படிமுறைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செயற்திட்டமானது கட்டிடத்தின் மேலதிக இடைவெளியினை உரிமையாளரிற்கு மாற்றுவதனூடாக வாடகையினை குறைக்க எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்காமை அவதானிக்கப்பட்டது. | மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டத்தினால் செய்யப்பட்டிருந்தது. மேலும் டிசீஏஎம்பி மற்றும் சீஆர்ஜபி இனால் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் மற்றும் ஆவணங்களின் பாதுகாப்பு காரணமாக ஓர் தனிப்பட்ட நுழைவு வேறு நிறுவனத்துடன் பகிரப்படமுடியாதிருந்தது. | |

### 3.2.17 துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலைச் செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலைச் செயற்திட்டமானது 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கை 2019 சனவரி 17 இல் கையொப்பமிடப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அது செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 827 நாட்கள் கடந்திருந்தும் செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த சிவில் வேலை செயலாற்றல் 23 சதவீதமாக மாத்திரம் இருந்தது. மேலும் 2019 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செயன்முறை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 39,303 மில்லியன் தொகையான 13 நடவடிக்கைகளில் ரூபா 38,605 மில்லியன் தொகையான 7 பிரதான நடவடிக்கைகள் ஆரம்பிக்க 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிட்டத்தட்ட 2 தொடக்கம் 24 மாதங்களினால் தாமதமடைந்திருந்தது. எனவே இலக்கிடப்பட்ட திகதிகளில் செயற்திட்டத்தின் நிர்மான வேலைகளை பூர்த்திசெய்வதில் உயர் ஆபத்து காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | உடன்பட்டனர். | இலக்கிடப்பபட்ட திகதிகளில் செயற்திட்டத்தினை பூர்த்திசெய்ய தாமதமடைந்த வேலைகளை விரைவாக பூர்த்திசெய்ய படிமுறைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2021 திசெம்பர் மாதத்திற்கான செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய மொத்த வடிவமைப்புக்களின் எண்ணிக்கை 20221 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 918 ஆக இருந்தது. இருப்பினும், திட்டமிடப்பட்ட வடிவமைப்புக்களின் எண்ணிக்கையில் 31 சதவீதத்தினை பிரதிநிதித்துப்படுத்தும் 285 வடிவமைப்புக்கள் 2021 திசெம்பர் முடிவினில் கூட ஒப்பந்ததாரரினால் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், உயர்மட்ட பீம் வடிவமைப்புக்கள் மற்றும் தளவடிவமைப்புக்கள் என்பவற்றின் பூர்த்தியாக்கல் மிகவும் மந்தகதியாக காணப்பட்டதுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறிக்கையிடப்பட்ட செயலாற்றல் முறையே 14 சதவீதம் மற்றும் 23 சதவீதமாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | 2021 திசெம்பர் மாதத்திற்கா ஆலோசகர்களின் செயலாற்ற அறிக்கையின் பிரகார ஒட்டுமொத்த செயற்திட்டத்திற்காகவும் ஒப்பந்ததாரரினால் வழங்கப்படவேண்டிய திட்டங்களின் மொத் எண்ணிக்கை 930 ஆகும் ஒப்பந்ததாரரின் நான்காவது மாற்றியமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகார 2021 திசெம்பர் முடிவி சமர்ப்பிக்கப்படவேண்டிய திட்டங்களின் எண்ணிக்கை 91 ஆகும். அதன்படி 3 சதவீதமான 28 எதிர்பார்க்கப்பட்ட திட்டங்க 2021 திசெம்பர் முடிவளவி பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | நிர்மான ஒப்பந்தங்கள் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றலை அடைய துரிதப்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | ரூபா 19,393 மில்லியன் தொகையான ஒதுக்கீடு பிஏஈசீ இன் வெளிநாட்டு கடன் பயன்படுத்தலிற்காக 2021 இல் பொதுத்திறைசேறியினால் வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தின் மந்தகதியான செயலாற்றல் வேலைகள் காரணமாக 77 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தம் ரூபா 14,891 மில்லியன் தொகையான ஒதுக்கீடு செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. முன்னைய ஆண்டிற்காக இன் நடவடிக்கைகளிற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளில் 77 சதவீதம் அல்லது ரூபா 4,302 மில்லியன் மந்தகதியான செயலாற்றல் காரணமாக செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உடன்பட்டனர். | செயற்திட்டத்தின் நிதிகளை வினைத்திறனாக பயன்படுத்தி இலக்குகளை அடைய தேவையான படிமுறைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 உள்நாட்டு நிதியளிப்பு செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் அதிவேகப்பாதை வலையமைப்பிற்கான அனுகுமுறையை அதிகரிக்க மாற்றுவீதிகள் மற்றும் கிராமிய வீதிகளின் 100,000 கி.மீ அபிவிருத்தியின் குறிக்கோளுடன் நிறுவப்பட்ட செயற்திட்டத்தினூடாக மீளாய்வாண்டின் போதான 30,000 கி.மீ வீதிகளின் அபிவிருத்தியை பூர்த்திசெய்ய திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும் அதில் 5153.19 கி.மீகளை உள்ளடக்கும் 4363 வீதிகள் மாத்திரமே அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. அதன்படி செயற்திட்டத்தின் செயலாற்றல் 17.1 சதவீதம் என்ற குறைந்த மட்டத்திலிருந்தது. | கோவிட் 19 நோய்ப்பரவல் நிலமை, போக்குவரத்து கட்டுப்பாடுகள் அமுல்படுத்தல், உரிய நேரத்தில் போதியளவு கட்டுநிதிகள் கிடைக்கப்பெறாமை, சந்தையில் மூலப்பொருட்களின் பற்றாக்குறை மற்றும் நிர்மான இயந்திரங்கள் மற்றும் தொழிற்சாலை வழங்கல்களிலான பழுதுகளை திருத்த சந்தையில் உதிரிப்பாகங்கள் கிடைக்கப்பெறாமை காரணமாக செயலாற்றல் குறைந்த மட்டத்திலிருந்தது. | நிர்மான ஒப்பந்தங்கள் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றலை அடைந்து கொள்ள துரிதப்படுத்தப்படல் வேண்டும். |

### 3.4 சொத்து முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) பொது செலவுகள் முகாமைத்துவம் நிதி ஒழுக்கங்களின் பராமரிப்பு எனும் பெயரினால் வெளியிடப்பட்ட 2019 டிசம்பர் 04 ஆம் தேதியிட்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இல. 07/2019 இன் பிரகாரம் செயலற்ற உறுதிகளின் வினையை தவிர்ப்பதற்கு செலவின முகாமைகளில் கிடைக்கூடிய வளங்களைப் பயன்படுத்த ஒவ்வொரு முயற்சியும் எடுக்கப்பட வேண்டியிருப்பினும், அமைச்சின் வசம் உள்ள வாகனங்களில், பயன்படுக்க கூடிய நிலையிலுள்ள 07 வாகனங்கள் பல ஆண்டுகளாக பயன்படுத்தாமல் பாதுகாப்பற்ற முறையில் நிறுத்தப்பட்டுள்ளன. | அமைச்சின் வசமுள்ள 06 வாகனங்கள் விற்பனைக்காக அடையாளப்படுத்தப்பட்டிருந் ததுடன் விற்பனை செயன்முறை கூட பூர்த்திசெய்யப்பட்டிருந்தது மேலும் அதனால் அவ்வாகனங்கள் ஓட்டத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில் லை. ஆனால் புதிய வாகனங்கள் இறக்குமதி செய்ய நீண்டகாலம் எடுக்கலாம் என்பதால் அது திருத்தப்பட்டு எதிர்கால தேவைகளிற்காக 03 வாகனங்களை பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது. | வாகனங்கள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அமைச்சிற்கு சொந்தமான KQ - 0690 ஆம் இலக்கமுடைய ரூபா 16 மில்லியன் பெறுமதியான வாகனம் 2020 நவம்பர் 18ஆந் திகதி முதல் தற்காலிகமாக மகநெகும வீதி நிர்மாணிக்கும் இயந்திரங்கள் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 வரை அவ் வாகனத்தினை மேற்கூறிய கம்பனிக்கு மாற்றம் செய்யவோ அல்லது அமைச்சிற்கு கொள்வனவு செய்யவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதுஇ மேற்கூறிய கம்பனி கூறப்பட்ட வாகனத்தினை அமைச்சிற்கு கையளிக்க அறிவித்திருந்தது. | மேற்கூறியபடி |
| (இ) | மீளாய்வாண்டு காலப்பகுதியின் போது ரூபா 84.6 மில்லியன் மொத்த பெறுமதியுடைய 07 வாகனங்கள் கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சிற்கும் ரூபா 2.35 மில்லியன் பெறுமதியான ஓர் வாகனம் பொதுச்சேவைகள் சமுதாய இராஜாங்க அமைச்சிற்கும் வழங்கியிருந்தது. இருப்பினும் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெறப்பட்ட 12 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சு ஓர் வேறான அமைச்சாக மாற்றப்பட்டதன் பின்னர் உடன்படிக்கைகள் மாற்றல் ஆவணங்களினூடாக அவ்அமைச்சின் கடமைகளிற்காக வழங்கப்பட்ட அவ்வாகனங்களின் உரிமையினை மாற்ற செய்யப்பட்டிருந்தது. விற்பனைக்காக அடையாளப்படுத்தப்பட்ட ஓர் மோட்டார் வாகனத்தினை பொதுச்சேவைகள் சமுதாய இராஜாங்க அமைச்சிற்கு திருத்தம் செய்து பயன்படுத்த கையளிக்கப்பட்டிருந்தது. அமைச்சானது ஓட்டநிலமையிலுள்ள வரையறுக்கப்பட்ட வாகனங்களை கொண்டுள்ளதனால் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்தான பல்வேறு வாகனங்கள் அலுவலக நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | மேற்கூறியபடி |

## 3.5 அரசு அதிகாரிகளின் பாதுகாப்பு வைப்பு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880(i) மற்றும் அரச உத்தியோகத்தர்களின் பிணைகள் கட்டளைச் சட்டத்தின் 612ஆம் அதிகாரத்தின் பிரகாரம், அமைச்சின் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் 02 பேர் மாத்திரம் பிணை வைப்புச் செய்திருந்தனர். | உடன்பட்டனர். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.6 இழப்புகள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்பு செய்யப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களை பதிவளிப்பதற்கான கூற்று உள்ளடக்கப்பட்டிருந்தும் ஒரு வருடம் முடிவடைந்திருந்த ஓர் வாகன விபத்துடன் தொடர்புபட்ட ரூபா 26,473 தொகை மற்றும் ஆண்டின் போது ஏற்பட்டிருந்த மூன்று விபத்துக்களுடன் தொடர்புபட்ட மொத்த தொகை ரூபா 124,200 என்பன ஓர் நட்டமாக அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சலுகைகள் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தன. இம்மீதிகளை மீளப்பெற்றுக்கொள்ள அல்லது அதற்காக ஏதாவது ஒன்றை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐயவினாவில் கூறப்பட்ட விபத்துக்களுடன் தொடர்புபட்ட ரூபா 26,473 தொகை ஏற்கனவே புத்தகங்களிலிருந்து பதிவளிக்கப்பட்டிருந்தது. ஆண்டின் போது ஏற்பட்டிருந்த மூன்று விபத்துக்களுடன் தொடர்புபட்டு குறிப்பிடப்பட்ட தொகையில் கூட்டுமொத்தம் ரூபா 61,560 காப்புறுதிகம்பனியிடமிருந்து மீளப்பெறப்பட்டிருந்ததுடன் ரூபா 10,500 புத்தகங்களிலிருந்து பதிவளிக்கப்பட்டிருந்தது. | பாதிப்புக்கள் மற்றும் நட்டங்களை நேர அடிப்படையில் ஈடுசெய்ய அல்லது புத்தகங்களிலிருந்து பதிவளிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.7 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்பு செய்யப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2006 பெறுகை வழிகாட்டிக்கான 2017 மார்ச் 15 இல் வழங்கப்பட்ட பிற்சேர்க்கை இல 32 இன் பிரகாரம் எந்தகாலாண்டிலும் பெறுகைகுழு மற்றும் தொடர்புடைய தொழிநுட்ப மதிப்பீட்டு குழு என்பனவற்றின் உறுப்பினர்களிற்கு செலுத்தமுடியுமான உயர்ந்தபட்ச வரையறை அவ்உத்தியோகத்தரின் அக்காலாண்டிற்கான அடிப்படை சம்பளத்தினை மிஞ்சக்கூடாது. இருப்பினும் அதற்கு முரனாக கூட்டுமொத்தம் ரூபா 4.42 மில்லியன் அவ்வரையறைகளை மிஞ்சி மீளாய்வாண்டின் போது 2021 ஆண்டுடன் தொடர்புபட்ட 12 உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வினால் இது தொடர்பான விசாரணையின் பின்னர் மேற்கூறிய உத்தியோகத்தர்களின் 11 பேர் அமைச்சிற்கு ரூபா 10.04 மில்லியன் மீள்கொடுப்பனவுகள் செய்திருந்தனர். அதன்படி 2020 ஆம் ஆண்டில் அவ்வரையறையினை கூட மிஞ்சி உரிய உத்தியோகத்தர்கள் செலுத்தப்பட்டிருக்கலாம் என்பதற்கான ஓர் அபாயம் இருப்பதாக கணக்காய்வில் அலட்சியப்படுத்த முடியாமல் இருப்பதுடன் மேற்கூறியபடி இவ் உத்தியோகத்தர்களினால் மீளச்செலுத்தப்பட்ட தொகையின் உண்மைத்தன்மை கூட கணக்காய்வில் சரிபார்க்கப்பட்டிருக்கவில்லை மேலும் பெறுகை வழிகாட்டிகளின் பிரகாரம் வரையறைக்கு மேலாக உத்தியோகத்தர்களினால் பெறப்பட்ட தொகை உத்தியோகத்தர்கள் தற்போது வேலை செய்யுமிடத்தில் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியிருந்தும் மேற்கூறிய உத்தியோகத்தர்களினால் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழான ஓர் செயற்திட்டத்திற்கு உரிய மீள் கொடுப்பனவுகளை செலவு | கூறப்பட்ட மேலதிக கொடுப்பனவுகளில் 11 உத்தியோகத்தர்கள் பெறுகை வழிகாட்டியின் திருத்தம் 32 இன் பிரகாரம் மீள்கொடுப்பனவுகள் செய்திருந்ததுடன் ஏனைய மேலதிக கொடுப்பனவுகள் முறையாக மீளப்பெறப்படும் மேலும் செலவு விபரங்களை அறிக்கையிட ஏற்பாடுகள் செய்யப்படும். | கொடுப்பனவுகள் 2006 பெறுகை வழிகாட்டியின் ஏற்பாடுகளின் பிரகாரம் பெறுகை குழுக்கள் மற்றும் தொடர்புடைய தொழிநுட்ப மதிப்பீட்டு குழுக்கள் போன்றவற்றின் உறுப்பினர்களிற்கு செய்யப்படலாம். |

வைப்பதற்கான காரணங்கள் கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4. நிலையான அபிவிருத்தி**

**4.1 நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான தயார்படுத்தல்.**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| வருடாந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடக்கப்பட்டிராத போதிலும், வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் 03 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்குரிய இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளன. | அடுத்தவருடத்திற்காக தயாரிக்கப்பட்ட வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் அவ்இலக்குகளை அடைவதில் வருடாந்த இலக்குகள் மற்றும் செயலாற்றல் இன்னும் விபரமாக கூற நடவடிக்கை எடுக்கப்படும். | வருடாந்த நிகழ்ச்சித்திட்டத்தில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டவட்டமாக உள்ளடக்கப்பட்டு, அவற்றை அடைதல் தொடர்பில் உரிய முறையிலான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

**5. மனிதவள முகாமைத்துவம்**

**5.1 இணைக்கப்பட்ட ஊழியர்கள், உண்மை ஊழியர்கள் மற்றும் தனிப்பட்ட சம்பளங்களிற்கான செலவு**

கணக்காண்டின் இறுதி நாளில் உள்ளவாரான அமைச்சின் உத்தியோகத்தர்கள் அமைப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| உத்தியோ அனும ஊண் வெற்றி அரச | கொள்கைத் அமைச்சின் | உண்மையான |

(அ)

| கத்தர் வகை | திக்கப் பட்ட ஆளனி | மையான ஆளனி | டம்/மிகை |
|---|---|---|---|
| -------- | ----------- | -------- | -------- |
| சீரேஸ்ட மட்டம் | 30 | 25 | 05 |
| மூன்றாம் நிலை மட்டம் | 04 | 01 | 03 |
| இரண்டாம் நிலை மட்டம் | 249 | 148 | 101 |
| ஆரம்ப நிலை மட்டம் | 28 | 19 | 09 |
| மொத்தம் | 311 | 193 | 118 |

இரட்டை அடிப்படையிலான பதவியொன்றான 101 அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வெற்றிடமொன்று நிலவிய போதிலும், அமைச்சின் செயற்பணிக்கு நேரடியாக தாக்கம் செலுத்தாத வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிராந்திய அலுவலகங்களின் கடமைகளுக்காக அமைச்சிற்கு இணைப்பு செய்யப்பட்ட 73 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டு, அமைச்சு அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 39.96 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட 24 உத்தியோகத்தர்கள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம், கருத்திற்கொள்ளும் போது பதவியணியை அங்கீகரிக்கும் போது சேவையின் தேவைப்பாடு தொடர்பில் பொருத்தமான மதிப்பீமொன்று மற்றும் சேவைத் தேவைப்பாட்டு பரிந்துரைகள் பொருத்தமற்று மேற்கொள்ளப்பட்டிருந்தன.

தீர்மானத்தின் அடிப்படையில் 2013 ஆம் ஆண்டின் போது 365 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அமைச்சிற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கான பதவியணி அங்கீகாரமும் கிடைத்துள்ளது. அமைச்சிலுள்ள இவ்அனைத்து உத்தியோகத்தர்களையும் வைத்திருப்பது சாத்தியமற்றதால் அவர்கள் அவர்களின் வசிப்பிடத்திற்கு அண்மையிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிராந்திய அலுவலகங்களில் நியமிக்கப்பட்டிருந்தனர். இதுவரை அவ்உத்தியோகத்தர்கள் அவ்வப்போது விடுவிக்கப்பட்டிருந்ததுடன் தற்போது காணப்படும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 71 மாத்திரம் ஆகும். இந்த எண்ணிக்கையை குறைப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள்களுக்கமைய, தற்போது அந்த எண்ணிக்கை 210 வரை குறைத்துக்கொள்ள முடியுமானதாகியுள்ளது. மேலும் அமைச்சின் தேவைப்பாடுகளின் அடிப்படையில் சீர்செய்தல்கள் ஊடாக 55 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பதவிகளை அடக்க முகாமைத்துவ சேவைகள் வேண்டுகோள்கள்விடுக்கப்பட்டிருந்தும் இதுவரை அனுமதி கிடைத்திருக்கவில்லை. எனவே உத்தியோகத்தர்களின் வேண்டுகோள்மீது ஏனைய நிறுவனங்களிற்கு இடமாற்றம் செய்யும் போது பிராந்திய அலுவலகங்களில் வேலை செய்யும் உத்தியோகத்தர்கள் ஓர் பதிலாளி இல்லாமல் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் மீள் ஒப்படைப்பு அவ்உத்தியோகத்தர்களிற்காக

ஊழியர் தேவைப்பாடும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்துதல் மற்றும் இதற்கரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

செய்யப்பட்டிருக்கமாட்டாது.
அமைச்சின் பொது நிர்வாக நடவடிக்கைகளை செய்வதற்காக அமைச்சின் சேவைத்தேவைப்பாடுகளின் அடிப்படையில் ஓட்டுனர்கள் அலுவலக உதவியாளர் சேவை மற்றும் ஏனைய வெற்றிடங்கள் என்பனவற்றிற்காக அரச உத்தியோகத்தர்கள் போதுமானதாக இல்லாததனால் வீதிஅபிவிருத்தி அதிகார சபையின் 08 முகாமைத்துவ உதவியாளர்கள் 02 ஓட்டுநர்கள் மற்றும் 10 அலுவலகஉதவியாளர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்தனர். ஓர் அலுவலக உதவியாளர் மற்றும் ஓர் அலுவலக வேலையாளர் இவ்அமைச்சினால் இணைந்த வருடாந்த சம்பளம் செலுத்துவதனூடாக கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சிற்கு தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்தனர் மேலும் எதிர்காலத்தில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின் கீழ் மேற்கூறிய அமைச்சிற்கு அவ் உத்தியோகத்தர்களை நிரந்தரமாக நியமிக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.
மேலும் புதிய மேலதிக செயலாளரின் (அபிவிருத்தி) வசிப்பிடத்திற்கு அண்மையில் இவ்அமைச்சில் எவ்வித ஓட்டுநர்களும் இல்லாமை மற்றும் அமைச்சிலுள்ள ஓட்டுநர் வெற்றிடங்கள் 07 ஆக இருந்தமை போன்றன காரணமாக உள்நாட்டு அரசு, பொருளாதார மேம்படுத்தல், சக்தி மற்றும் வலு சுற்றுச்சூழல் அலுவல்கள், நீர்வழங்கள் மற்றும் வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சிலுள்ள அவ்உத்தியோகத்தரின் முன்னைய வேலை செய்யுமிடத்திலிருந்து ஓர்

| | | | |
|---|---|---|---|
| | | ஓட்டுநர் 6 மாதங்கள் காலத்திற்கு இவ் அமைச்சிற்கு தற்காலிகமாக விடுவிக்கப்பட்டிருந்ததுடன் பிறகு மீண்டும் 2021.07.01 இலிருந்து ஒரு வருட காலத்திற்கு இவ்அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. மேற்கூறிய ஓட்டுநர் தற்போது இவ்அமைச்சில் வேலை செய்கின்றார். | |
| **(ஆ)** | மீளாய்வாண்டின் டிபாது அமைச்சினால் ரூபா 936,575 இணைந்த வருடாந்த சம்பளம் செலுத்துவதனூடாக ஓர் அலுவலக உதவியாளர் மற்றும் ஓர் சிற்றூழியர் போன்றோர் கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்கஅமைச்சிற்கு தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்ததுடன் உள்நாட்டு அரசு, பொருளாதார மேம்படுத்தல், சக்தி மற்றும் வலு சுற்றுச்சூழல் அலுவல்கள், நீர்வழங்கள் மற்றும் வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சிலுள்ள ஓர் ஓட்டுனர் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்தார். | இவ் அமைச்சினால் கொடுப்பனவு செய்வதனூடாக இரண்டு உத்தியோகத்தர்கள் கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்கஅமைச்சிற்கு தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்தனர் மேலும் எதிர்காலத்தில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின் கீழ் அவ் உத்தியோகத்தர்களை மேற்கூறிய அமைச்சிற்கு நிரந்தரமாக நியமிக்க ஏற்பாடுகள் செய்யப்படும். மேலும் புதிய மேலதிக செயலாளரின் (அபிவிருத்தி) வசிப்பிடத்திற்கு அண்மையில் இவ்அமைச்சில் எவ்வித ஓட்டுநர்களும் இல்லாமை மற்றும் அமைச்சிலுள்ள ஓட்டுநர் வெற்றிடங்கள் 07 ஆக இருந்தமை போன்றன காரணமாக உள்நாட்டு அரசு, பொருளாதார மேம்படுத்தல், சக்தி மற்றும் வலு சுற்றுச்சூழல் அலுவல்கள், நீர்வழங்கள் மற்றும் வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சிலுள்ள அவ்உத்தியோகத்தரின் முன்னைய வேலை செய்யுமிடத்திலிருந்து ஓர் ஓட்டுநர் 6 மாதங்கள் காலத்திற்கு இவ் அமைச்சிற்கு தற்காலிகமாக விடுவிக்கப்பட்டிருந்ததுடன் பிறகு மீண்டும் 2021.07.01 இலிருந்து ஒரு வருட | மேற்கூறியபடி. |

காலத்திற்கு இவ்அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. மேற்கூறிய ஓட்டுநர் தற்போது இவ்அமைச்சில் வேலை செய்கின்றார்.

**5.2 மனிதவள மேம்பாட்டுக்கான சரியான திட்டமிடல் இல்லாமை.**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | மீளாய்வாண்டிற்காக 25 பாரிய பயிற்சியளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 192 மணித்தியாலங்கள் பயிற்சியளிப்பு காலம் உத்தியோகத்தர்களின் பல்வேறு மட்டங்களிலுள்ள உத்தியோகத்தர்களிற்காக திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும் ஒரு உத்தியோகத்தர் மாத்திரமே ஆண்டுகாலத்தின் போது 12 மணித்தியால பயிற்சியளிப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றியிருந்தார். அதன்படி மனிதவள அபிவிருத்தி திட்டம் முறையாக அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு காலத்தின் போது கோவிட் நோய்ப்பரவல் இடம்பெற்றுக்கொண்டிருந்தமை, அந்நிலமைகள் காரணமாக வளவாளர்களை வரவழைப்பதில் சிக்கல்கள் மற்றும் பயிற்சியளிப்பு நிறுவனங்களினால் பயிற்சியளிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தமை போன்றன காரணமாக நிறுவனம் மூடப்பட்டதன் காரணமாக பயிற்சியளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவது சாத்தியமற்றதாகும். | தற்போதய நிலமையின் அடிப்படையில் பயிற்சியளிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் சூம் தொழிநுட்பம் போன்ற ஊடகத்தினை பயன்படுத்தி நடாத்தப்படல் வேண்டும். |
| **(ஆ)** | 2018 சனவரி 24 ஆம் திகதிய பொதுநிர்வாக சுற்றறிக்கை இல 02/2018 இன் பிரிவு 03 இன் பிரகாரம் ஒவ்வொரு உத்தியோகத்தர்களினதும் திறன்கள் மனிதவள அபிவிருத்திக்காக வேறாக அடையாளப்படுத்தப்பட்டிருக்காததுடன் தகுந்த முறை அதற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சில் வேலை செய்யும் அனைத்து உத்தியோகத்தர்களிற்கும் வழங்கப்பட்ட பொறுப்புக்கள் கருத்தில் கொண்டு உத்தியோகத்தர்களிடம் காணப்படும் திறன்களை அங்கீகரித்து விடயங்களை மாற்றுவது போன்ற நடவடிக்கைகளை செய்ய படிமுறைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |